விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 26.03.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 116 | பக்கங்கள் : 16




# யாழ்.மாநகரின் மத்திய பகுதி முடக்கம்!

## பஸ் நிலையம் பூட்டு, மாணவர்கள் அடையாளம் காணப்பட்ட பாடசாலைகளில் வகுப்புகள் நிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதியை முடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனால் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம் கோட்டை பகுதிக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

நேற்று மாலை யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் க.மகேசன் தலைமையில் இடம்பெற்ற அவசர கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த புதிய கட்டுப்பாடுகள் தொடர்பில் மாவட்ட செயலாளர் தெரிவித்ததாவது


யாழ்ப்பாணம் மாநகரின் வேம்படிச் சந்தியில் இருந்து மின்சார நிலையம் அமைந்துள்ள பகுதியும், மின்சார நிலைய வீதியில் கே.கே.எஸ்.வீதியிலிருந்து வைத்தியசாலை வரையும் மூடப் படும். கே.கே.எஸ் வீதி சத்திரச்சந்தியிலிருந்து முட்டாஸ்

15



08

இந்தியாவின் நிலைப்பாடு சரியா?



12

கண்டம் கடக்கும் ஏவுகணையை பரிசோதித்தது வட கொரியா!



13

நிஷங்க கன்னி சதம்: இலங்கை எழுச்சி!!



14

காடழிப்புக்கு எதிராக கொழும்பில் ஆர்ப்பாட்டம்

# ஜெனிவா தீர்மானத்தை நிராகரித்தது இலங்கை



## பொறுப்பு கூறல் விடயம் உள்ளூர் பொறிமுறை ஊடாகவே முன்னெடுக்கும் என்றும் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தேவையற்ற ஒன்றாகும். இது இலங்கை சட்டத்திற்கு முரண்பட்டதாகும் என்று நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ள இலங்கை அரசு, பொறுப்பு கூறல் விடயம் உள்ளூர் பொறிமுறையின் ஊடாக முன்னெடுக்கும் என்றும் குறிப்பிட்டது.

15

# யாழ்.நகரில் கொரோனா கொத்தணி!

## ஒரே நாளில் மட்டும் 66 பேருக்குத் தொற்று வடக்கில் நேற்று மட்டும் 80 தொற்றாளர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்.26

வடக்கு மாகாணத்தில் மேலும் 80 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது. இந்தத் தொற்றாளர்களில் 66 பேர் யாழ். மாநகர மத்தி நவீன சந்தைப் பகுதியில் அடையாளம் காணப்பட்டனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

15

# இந்தியாவை விமர்சிப்பது இலங்கைக்கே அழுத்தம்!

கொழும்பு, மார்ச் 26

இந்தியாவை கடுமையாக விமர்சிப்பது இலங்கைக்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும் என வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியா என்பது இலங்கையின் நட்பு நாடு.

15

# இந்திய மீனவரின் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் கையாள்க!

## இலங்கையிடம் தூதரகம் வலியுறுத்தல்!

கொழும்பு, மார்ச் 26

இந்திய மீனவர்களின் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் கையாளவேண்டும் என இந்திய தூதரகம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இலங்கைக் கடற்பரப்பில் நேற்று முன் தினம் இரவு 54 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து கருத்து வெளியிடும்போதே இந்திய தூதரகம் இவ்வாறு

15

# அனைத்து மத்ரஸாக்களும் தடை செய்யப்படமாட்டாது

## சபையில் கூறினார் சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச்.26

நாட்டிலுள்ள அனைத்து மத்ரஸாக்களும் தடை செய்யப்படமாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், 5 முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மதம் மற்றும்

15

# சர்வதேச விதி மீறல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடை!




## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் மீளவும் வலியுறுத்து

கொழும்பு, மார்ச். 26

சர்வதேச அளவிலான விதி மீறல்களுடன் தொடர்புடைய இலங்கையர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐ.நா. உறுப்பு நாடுகள் முன்வரவேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவா தீர்மானத்தை...

இலங்கை இறைமை கொண்ட நாடா கும். அந்த நிலையை தொடர்ச்சியாக பாது காப்பதே அரசாங்கத்தின் எதிர்ப்பார்ப் பாகும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித் தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங் கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப் பட்டமை தொடர்பாக நேற்று பாராளு மன்றத்தில் அமைச்சர் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றினார்.

இந்த தீர்மானம் தேவையற்ற ஒன்றா கும். இது இலங்கை சட்டத்திற்கு முரண் பட்டதாகும் என்று குறிப்பிட்ட அமைச் சர் இந்த தீர்மனத்துக்கு பேரவையில் பெரும்பான்மை கிடைக்கவில்லை என் றும் சுட்டிக்காட்டினார்.

தீர்மானம் தொடர்பான விவரங்கள் அடங்கிய ஆவணங்களை அமைச்சர் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித் தார்.

அரசாங்கம் பொறுப்பு கூறல் விட யத்தை இலங்கை ஊடாக உள்ளூர் பொறிமுறையின் ஊடாக முன்னெடுக் கும் என்றும் கூறிய அமைச்சர், தனி ஈழ நாட்டை இலங்கையில் கட்டியெழுப்பும் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய சிலர் தற்பொழுது அதனை வேறு ஒரு விதத் தில் முயற்சிக்கின்றனர். புலிகள் அன்று மேற்கொண்ட மனித உரிமைகள் குறித்து அன்று எவரும் குறிப்பிடவில்லை.

இவர்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகி யோரை கொலை செய்ய முயற்சித்தனர். எதிர்த்தரப்பில் பலரை கொன்றனர். உள் ளூரில் மாத்திரமன்றி இந்தியாவின் முன் னால் பிரதமர் ரஜீவ் காந்தியையும் கொலை செய்தனர். ஈ.பி.ஆர்.எல்.எப்பை சேர்ந்த பலரை கொலை செய்தனர். ஆனால் அவர்கள் தற்பொழுது மௌனம் காக்கின் றனர் என்றும் அமைச்சர் கூறினார்.

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாடு பிளவுபடுவதை இராணுவத்தினர் தடுத்து மனித உரிமை களை பாதுகாப்பதற்கு அரசாங்கம் நட வடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை எந்தவித அடிப்படையும் இன்றி இலங் கையில் உள் விவகாரங்களில் தலையிடு வதற்காக மேற்கொள்ளும் முயற்சியை நிராகரிப்பதாக அமைச்சர் தினேஸ் குண வர்தன தெரிவித்தார்.

அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மையை முன்னெடுத்து மக் களின் மனித உரிமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பாதுகாப்பதற்கு சமகால அரசாங்கம் செயல்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணையா ளர் மிச்சேல் பச்லெட் இலங்கைக்கு எதி ராக சமர்ப்பித்த அறிக்கையை இரண் டாக பிரித்துப் பார்க்க முடியும். புலிகள் அமைப்பினர் இடம்பெற்ற மோதலில் அந்த அமைப்பு தோல்வியடைந்த காலப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் உயிரிழப்புக்கள் குறித்து விசாரணை செய்வதில் உள்ள முரண்பாடுகள் மற்றும் கடந்த அரசாங்கத்தை தோல்வியடைய செய்து நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறை யாண்மையை பாதுகாப்பதில் ஜனாதிபதி கேட்டபாய ராஜபக்ஷவின் நிர்வாகத்தி னால் முடிந்துள்ளமை விசேட அம்சமாகும்.

நாடொன்றின் உலக விடயங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் கருத்து தெரிவிக்க முடியாது என்று சுட் டிக்காட்டிய அமைச்சர், ஜனாதிபதி கேட்ட பாய ராஜபக்ஷ தலைமையிலான அர சாங்கத்தை சீர்குலைக்கும் வகையில் எதிர்க்கட்சியினர் முன்வைத்த விடயங் கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கைக்கு பின்புலமாக அமைந்ததாக வும், இவர்கள் ஒன்றிணைந்த வகையில் செயற்பட்டுள்ளமை தெளிவாகுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டின் சுகாதார நிலைமையை பாது காப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளை அறியாமல் அது தொடர்பாக மனித உரிமைகள் ஆணை யாளர் அறிக்கையிட்டுள்ளார்.

கொவிட் தொற்றை கட்டுப்படுத்தும் நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலை யில் காணப்படுகின்றது. இருப்பினும் இது தொடர்பாக அறியாமல் குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த அரசாங்க காலத்தில் மாகாண சபை முறையில் திருத்தத்தை மேற்கொள் வதற்காக சட்ட திருத்தம் செய்யப்பட்டது. இதன்போது திருத்தம் தொடர்பில் வாக் களிப்பை நடத்துவதற்கு முடியாத நிலை ஏற்பட்டது. முன்னாள் ஜனாதிபதி, பிரத மருக்கு இடையில் இருந்து வந்த கருத்து முரண்பாடுகள் காரணமாக நாடு மேலும் சிக்கலான நிலைக்கு தள்ளப்பட்டது. இதற்கு அமைவாக மாகாண சபை தேர் தலை நடத்துவது தொடர்பில் உயர்நீதி மன்றம் வரை விடயங்கள் முன்னெடுக்கப் பட்டன. இதனை சரி செய்வதற்கு ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தெளிவான மக்கள் ஆணை கிடைத்ததாக அமைச்சர் தினேஸ் குணவர்தன மேலும் குறிப்பிட் டார்.

சில நாடுகளுடன் கருத்து வேறுப்பாடு கள் இருந்த போதிலும் வெளிநாட்டு அமைச்சு மாத்திரம் இன்றி ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான அர சாங்கம் அரசியல் மற்றும் இராஜதந்திர ரீதியில் இணைந்து செயற்பாடுகள் முன் னெடுப்பதாக அமைச்சர் தினேஸ் குண வர்தன மேலும் தெரிவித்தார். (அ)

## யாழ். மாநகரின்...

கடை சந்தி வரையும் மூடப்படும்.

யாழ்ப்பாணம் மாநகரில் பாடசாலை களில் தொற்று அடையாளம் காணப் பட்ட மாணவர்கள் பயிலும் வகுப்புகள் மட்டும் 10 நாள்களுக்கு இடைநிறுத்தப் படுகிறது.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மண்டபங்களில் திருமண நிகழ்வுகள், ஏனைய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படு கின்றன. வீடுகளில் சுகாதார மருத்துவ அதிகாரியின் அனுமதியுடன் வீடுகளில் நடத்த அனுமதிக்கப்படும்.

உயிரிழந்தோரின் இறுதிக் கிரிகை களுக்கு 25 பேர் மாத்திரம் அனுமதிக் கப்படுவர்.

யாழ்ப்பாணம் மாநகரில் மக்களின் தேவையற்ற நடமாட்டத்துக்கு தடை விதிக்கப்படுகிறது.

அத்துடன், யாழ்ப்பாணம் மாநகரின் மத்திய பகுதி முடக்கப்பட்டு பேருந்து நிலையங்கள் கோட்டைப் பகுதிக்கு மாற் றப்படுவதுடன், வர்த்தக நிலையங்களும் மூடப்படுகின்றன. (அ)

## யாழ். நகரில்...

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 677 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டன. இதன் போதே, 80 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர பொதுச் சுகா தார மருத்துவ அதிகாரி பிரிவில் 77 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டது. இவர்களில் 11 பேர் ஏற்கனவே தொற்றாளர்களுடன் தொடர் புடையவர்கள் என சுயதனிமைப்படுத்தப் பட்டவர்கள்.

யாழ்ப்பாணம் மாநகரில் நவீன சந்தை உள்ளிட்ட கடைத் தொகுதிகளில் பணி யாற்றும் 66 பேருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

தெல்லிப்பழை வைத்தியசாலை தனி மைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

முல்லைத்தீவு பொது வைத்தியசாலை யில் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத் தப்பட்டது. இவர் கொரோனா அறிகுறி களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டவர் என்றும் மருத்துவர் கேதீஸ் வரன் தெரிவித்தார். (அ-எ-03)

# அரிசி விலைகளில் திடீர் மாற்றம்!

## விவசாய அமைச்சு அறிவிப்பு

கொழும்பு,மார்ச்.26

அரிசி விலைகளில் திடீர் மாற்றம் செய் யப்பட்டுள்ளது என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டரிசி ஒரு கிலோ 97 ரூபாய்க்கும், வெள்ளை மற்றும் சிவப்பு அரிசி ஒரு கிலோ 95 ரூபாய்க்கும் விற் பனை செய்யப்படும் என விவசாய அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி யிலிருந்து குறித்த விலை அமுல்படுத்தப் படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ச.தொ.ச. மற்றும்



கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மற்றும் சுப்பர் மார்க்கெட்டுக்களில் மேற்படி விலைகளில் அரிசியைக் கொள்வனவு செய்யமுடியும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# கொரோனா தொற்றால் மேலும் மூவர் மரணம்

கொழும்பு,மார்ச்.26

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நேற்று மேலும் மூவர் உயிரி ழந்தனர் என அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நாட்டில் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 557 ஆக அதிகரித்துள்ளது. (எ)

## சர்வதேச விதி...

அத்துடன், தேசிய நீதிமன்றங்கள் ஊடாக சர்வதேச குற்றங்களுக்கான நீதி யைப் பெற்றுக்கொடுப்பதை உறுப்பு நாடு கள் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டு மெனவும் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட தீர்மானம் கடந்த 23 ஆம் திகதி நிறைவேற் றப்பட்டது.

இந்நிலையில், இது குறித்து நேற்று கருத்து வெளியிட்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை தொடர் பான ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் தீர்மானம் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகவல், பொறுப்புக்கூறல் மற்றும் நீதி ஆகியவற் றைப் பெற உதவும் வெற்றியாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், தீர்மானத்தைக் கொண்டு வருவதற்காக பிரசாரம் செய்த செயல் பாட்டாளர்களுக்கு எதிரான எந்தவொரு பழிவாங்கலும் கடுமையான விளைவு களை ஏற்படுத்தும் என ஐ.நா. மற்றும் உறுப்பு நாடுகள் இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வலியு றுத்த வேண்டும் எனவும் கண்காணிப் பகம் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நாவின் 46-1 தீர்மானம், இலங்கை தொடர்பான எதிர்கால நடவடிக்கை களைக் கண்காணித்து சர்வதேச குற்றங் களின் ஆதாரங்களைச் சேகரிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஒரு புதிய பொறுப்புக்கூறல் செயன் முறையை நிறுவுகிறது. இந்தத் தீர்மா னத்தை இலங்கை அரசாங்கம் கடுமை யாக எதிர்த்தது.

இதனையடுத்து, அண்மைய மாதங் களில் மனித உரிமை ஆர்வலர்களுக்கு எதிராக ஏராளமான அச்சுறுத்தல்கள் மற்றும் துன்புறுத்தல்கள் விடுக்கப்பட்ட தாகத் தகவல்கள் தெரிவிப்பதாகவும் அந் தக் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப் பட்டவர்களின் குடும்பங்கள் தங்களது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறியவும் பொறுப்புள்ளவர் களைக் கணக்கில்கொள்ளவும் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

இதேவேளை, இலங்கை தொடர் பான மனித உரிமைகள் பேரவையின் முக்கிய தீர்மானமானது, இலங்கையில் நீதி மறுக்கப்பட்டால், இதற்குப் பொறுப் புக்கூறலை ஏற்படுத்த ஐ.நா. முன்வரும் என்பதைக் காட்டுகின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனிவா இயக்குநர் ஜான் பிஷர் கூறியுள்ளார்.

இதேவேளை, இலங்கையைப் போலவே பல அரசாங்கங்களும் தங்கள் சர்வதேச சட்டக் கடமைகளை மதிக்கத் தவறும் போது மனித உரிமைகள் பேரவை இது போன்ற கணிசமான நடவடிக்கைகளை முன்னெடுத்துப் பதிலளிக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள் ளார். (அ-எ)

## இந்திய மீனவரின்...

தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்படையால் நேற்று முன் தினம் இரவு இந்திய மீனவர்கள் 54 பேர் கைது செய்யப்பட்டதாக இந்திய தூதரகத் தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்திய மீனவர்களுடன் தொடர் புடைய பிரச்சினைகள் மனிதாபிமானத் துடன் தீர்க்கப்பட வேண்டும் என்பதைத் தாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம் என அவர் குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு அவசரகால பொருட்களை வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய மீனவர்களுக்கு தூதரகத்தின் உதவியை விரைவாகப் பெறுவதற்கு இலங்கை அரசாங்கத்துடன் தாங்கள் பணி யாற்றி வருகிறோம் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

## அனைத்து...

அரபியை மட்டுமே கற்பிக்கும் மத்ரஸாக் கள் தேசிய கல்விக் கொள்கைக்கு எதிரா னவை என்பதால் தடை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மீண்டும் வலி யுறுத்தினார்.

முஸ்லிம் சமுதாயமும் அமைப்புக் களும் ஏற்கனவே மத்ரஸாக்களைத் தடை செய்ய ஒப்புதல் அளித்துள்ளன.

எவ்வாறிருப்பினும் 16 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு கற்பிக்கும் மத்ரஸாக் கள் தடை செய்யப்படமாட்டாது என் றும் அவர் குறிப்பிட்டார். (எ)

## இந்தியாவை...

ஜெனிவாவில் இந்தியா எடுத்த தீர்மானம் இலங்கைக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் நாடு தற்போது சர்வதேச அழுத்தங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் அரசாங்கத் தில் உள்ள பங்காளி கட்சி இந்தியாவை கடுமையாக விமர்சிப்பது இலங்கைக்கு மேலும் அழுத்தத்தை அதிகரிக்கும்" என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, இந்தியாவால் இலங் கைக்கு தொடர்ந்தும் சோதனைதான் என அரசின் பங்காளி கட்சியான அமைச் சர் விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது...!

நல்லாட்சி அரசாங்கத்தின்போது மாகாண சபைகளின் தேர்தல்களை கலப்பு தேர்தல் முறையில் மாற்றுவதற்கு முடிவுசெய்யப்பட்டு சட்டமும் இயற்றப்பட்டது.

மாகாணசபைத் தேர்தலை நடாத்தவேண்டும் என்றால் புதிய சட்டத்தின்படி தொகுதிகள் பிரிக்கப்படவேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அது முழுமையாக பூர்த்தியடையவில்லை.

தொகுதிகளைப் பிரிப்பதென்பது சாதாரணமான விடயமல்ல. உள்ளூராட்சி தேர்தல்களின் போதும் புதிய முறையில் நடாத்தப்பட்டது. ஆனால் அதில் பாரிய சிக்கல்கள் இருக்கவில்லை. ஏற்கனவே வட்டாரங்களாக எல்லைகள் இருந்தன. உதாரணத்திற்கு யாழ்ப்பாண மாநகர சபையில் முன்னரே வழக்கத்திலிருந்த வட்டாரங்களையே புதிய தேர்தல் முறையிலும் பயன்படுத்தப்பட்டது. அதற்காகவும் வட்டாரங்களை எல்லையிட குழு அமைக்கப்பட்டு பல இழுபறிகளுக்கு பின்னரே தேர்தலை நடாத்தமுடிந்தது. ஆனால் மாகாண சபைகளுக்கு அப்படியல்ல. முழுக்க முழுக்க புதிதாக தொகுதிளைப் பிரிக்க வேண்டும்.

இது ஒரு சிக்கலான பிரச்னை என்று தெரிந்து கொண்டுதான் அப்போதைய நல்லாட்சி அரசாங்கம் அதனை கொண்டுவந்தது.

அவர்களைப் பொறுத்தவரை தேர்தலை பின்போடுவதற்கே விரும்பினார்கள். அதற்கு இந்த தொகுதிப்பிரிப்பு தாமதத்தை காரணமாக சொல்ல முடிந்தது.

ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த இன்றை யஆட்சியாளர்கள், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடாத்தவேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்துவந்தனர்.

பழைய முறையிலேயே தேர்தல்களை நடாத்தலாம் என்றும் அதற்காக பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் பிரேரணை கொண்டுவந்தாலே போதும் என்றும் அப்போதைய எதிர்க்கட்சியான இன்றைய ஆளும் கட்சியினர் கூறிவந்தனர்.

ஆனால் இப்போது ஆளும் கட்சியாக இருக்கும் போது, அதுவும் மூன்றில் இரண்டு பொரும்பான்மையுடன் இருக்கும்போது தேர்தலை நடாத்துவதை இழுத்தடித்து வருகின்றனர்.

ஆனால் அன்றைய ஆளும் கட்சியான இன்றைய எதிர்க்கட்சியோ இப்போது மாகாண சபைகளுக்கு தேர்தலை நடாத்தவேண்டும் என்று தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்றது.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை மாறமாறி ஆட்சிக்கு வரும் இரண்டு தரப்பினரும், ஒருவருக்கு மற்றவர் எதிர் எதிர் கருத்துடனேயே அரசியல் பயணம் செய்து வருகின்றனர்.

அது வழக்கமானதுதான்.

ஆனால் தமிழர் தரப்பும் இப்போது அதே பாணியில் பயணிக்க ஆரம்பித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர், தமிழர் தரப்பிலிருந்து வரும் அறிக்கைப் போர் இதனையே வெளிப்படுத்துகின்றது.

தமிழர்களின் பிரதான அரசியல் சக்தியான கூட்டமைப்பு ஐநா தீர்மானத்தை வரவேற்க, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார், அந்த தீர்மானத்தை மூர்க்கத்தனமாக எதிர்க்க ஆரம்பித்திருக்கின்றார்.

ஐ.நா. தீர்மானத்தின் மூலம் சுமந்திரன் இலங்கையைக் காப்பாற்றிவிட்டார் என்கிறார் அவர். இந்தத் தீர்மானம் வந்திருக்காவிட்டால் அடுத்து என்ன என்பதற்கு அவரிடம் பதில் இருக்குமோ தெரியவில்லை. குற்றவாளிகளே குற்றங்களுக்கு விசாரணை நடாத்துவதா என்ற அவரது வாதம் நியாயமானதுதான்.

ஆனால், குற்றவாளிகள்தான் விசாரணை நடாத்தவே தாங்கள் தயாராக இல்லை என் கிறார்களே!. இன்னும் ஓராண்டில் சாட்சியங்களை சேகரித்தல், பாதுகாத்தல் போன்ற பணிகளை மனிதஉரிமை பேரவை செய்யப் போகின்றது. இந்த ஓராண்டில் இலங்கை விசாரணைகளை நடாத்தி தனது கடமையைச் செய்யாவிட்டால் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து ஆணையர் அறிக்கையிடவேண்டும்.

ஆக, இந்த காலப்பகுதியில் இலங்கை ஒன்றும் செய்யப்போவதில்லை என்பது தெரிந்தது தான். எனவே, இந்தத் தீர்மானத்தை வலுவானதாக்கி, இதன் அடுத்த பாய்ச்சலுக்கு செல்லவேண்டியதுதானே தமிழர் தரப்பின் புத்திசாதுரியமாக வேலை. அதைவிடுத்து சுமந்திரன் ஆதரிப்பதால் நாங்கள் எதிர்க்கிறோம் என்ற குடும்பிபிடிச் சண்டை தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் தரப்போவதில்லை!

- ஊர்க்குருவி.

# யாழில் மீண்டும் முடக்க நிலை ஏற்படாதிருக்க ஒத்துழையுங்கள்

## பொதுமக்களிடம் அரச அதிபர் கோரிக்கை



யாழ்ப்பாணம்,மார்ச் 26

**யாழில் மீண்டும் முடக்க நிலை ஏற்படாதிருக்க பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.**

யாழ். மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைய நாள்களில் கொரோனா தொற்று நிலைமை சற்று அதிகரித்து காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் 37 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களுடன் சேர்த்து மொத்தமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இது வரை 481 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. நமது மாவட்டத்தில் தொற்றுக்குள்ளான 258 பேர் பூரண சுகமடைந்து வீடு திரும்பினர்.

இதேவேளை, 739 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 892 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்தத் தொற்று நிலைமையானது மார்ச் மாதத்தில் உச்சபட்ச நிலையில் காணப்படுகின்றது.

மார்ச் மாதத்தில் மாத்திரம் 150 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டது. தற்போதைய காலகட்டத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாகச் செயல்பட வேண்டியுள்ளது.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அத்தோடு ஏனைய அனைத்துச் செயல்பாடுகளும் வழமை போன்று இடம்பெற்று வருகின்றன.

இடர்காலமாக இருக்கின்ற இக்காலப் பகுதியில் மிகவும் அவதானமாக பொதுமக்கள் செயல்பட வேண்டும். அதேபோன்று அரச, தனியார் மற்றும் ஏனைய நிறுவனங்களும் தங்களுடைய பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் தங்களுடைய செயல்பாடுகளை மேற் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய காலகட்டத்தில் அரசாங்கம் விடுக்கின்ற அறிவுறுத்தல்கள் அதேபோன்று சமூக இடைவெளி பேணுதல் முகக்கவசம் அணிதல் போன்றவற்றை கிராமமாகப் பின்பற்றி தங்களையும் தங்களுடைய உறவினர்களையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பொதுமக்களுக்கு உள்ளது.

போக்குவரத்தின் போதும் ஏனைய செயல்பாடுகளின் போதும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுதல் அவசியமாகும். அத்தோடு அத்தியாவசியமான தேவைகள் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்காக வீடுகளிலிருந்து வெளியேறுவதைத் தவிர்த்தல் சிறந்தது.

பொதுமக்கள் அனைவரும் சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளைப் பின்பற்றி செயல்படுதல் வேண்டும். அத்தோடு பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பும் போதும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புதல் சாலச் சிறந்தது- என்றார். (எ)

# தமிழ் மக்களுக்கு நீதி பெற்றுக்கொடுக்கும் பொறிமுறையை உள்வாங்கவில்லை ஐ.நா.

## தீர்மானம் குறித்து கஜேந்திரகுமார் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட பிரேரணை இன அழிப்புக்குள்ளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு முழுமையான நீதியைப் பெற்றுக் கொடுக்கும் பொறிமுறையை உள்வாங்கவில்லை. மாறாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை சிங்கள மக்கள் மத்தியில் வெறுப்புக்குள்ளாக்கி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கத்தை மாத்திரம் கொண்டுள்ளது.

விசாரணைகள் ஏதுமின்றி தண்டிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆராய பிரேரணையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளமை புனர்வாழ்வளிக்கப்பட்டுள்ள போராளிகளை நெருக்கடிக்குள்ளாக்கும். ஆகவே, பிரேரணையின் வெற்றியை தமிழ் மக்கள் முழுமையாக கொண்டாட முடியாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# நாட்டின் பல பாகங்களில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, மார்ச் 26

சப்ரகமுவ, மேற்கு, வட மேற்கு, மத்திய மாகாணங்கள் மற்றும் காலி, மாத்தறை மற்றும் மன்னார் மாவட்டங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மேற்கண்ட பகுதிகளில் சில இடங்களில் 75 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சியை எதிர்பார்க்கலாம் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழை காலங்களில் தற்காலிகமாக வலுவான காற்று மற்றும் மின்னல் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ)




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.03.2021 வெள்ளிக்கிழமை
சார்வரி, பங்குனி 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## பிரேரணை ஆட்சி மாற்றத்திற்கானதா?

மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் மீதான புதிய பிரேரணை நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, ஒவ்வொருவரும் அவர்களின் விருப்பு வெறுப்புக்களுக்கும், புரிதலுக்கும் ஏற்றவகையில் வியாக்கியானங்களை வழங்கிவருகின்றனர். இதில் சில விடயங்கள் சாதகமாக இருக்கின்றன என்று ஒரு சாராரும், இது மீளவும், உள்ளக பொறிமுறையை வலியுறுத்துவதாகவே அமைந்திருக்கின்றது என்று பிறிதொரு தரப்பினரும் வாதிட்டுவருகின்றனர். ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, சற்று மாறுபட்ட வகையில் ஒரு கருத்தை தெரிவித்திருக்கின்றது. அதாவது, சீனசார்பு நிலையில் பயணிக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியை சிங்கள மக்கள் மத்தியில் அவமானப்படுத்தி, ஆட்சியை மாற்றுவதற்காக மட்டுமே இந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டிருப்பதாக கஜேந்திரகுமார் தெரிவித்திருக்கின்றார். இதுபோன்றதொரு கருத்தை ஏற்கனவே, உருத்திரகுமாரன் தலைமையிலான நாடுகடந்த அரசாங்கம் என்னும் புலம்பெயர் அமைப்பும் தெரிவித்திருந்தது. அதாவது, ஆட்சி மாற்றமே இந்த பிரேரணையின் நோக்கமாகும். அவ்வாறாயின், ராஜபக்ஷக்கள் பலவீனப்படுவதை இவர்கள் விரும்பவில்லையா?

உண்மையில் இந்த பிரேரணையை உற்று நோக்கினால், இலங்கையின் மீதான சர்வதேச கண்காணிப்பை மேலும் அதிகரிக்கும் நோக்கிலேயே இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதற்கு ஒரு காரணமுண்டு. அதாவது, ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைக்க மறுத்துவிட்டது. பிரேரணையை ஏற்றுக்கொள்ள மறுத்திருக்கின்றது. இவ்வாறானதொரு நிலையில் அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு விடயத்தையும் பேரவை எதிர்பார்க்க முடியாது. அதேவேளை, மேற்குலகமும் எதிர்பார்க்க முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் பிரேரணையின் நடைமுறைப் பந்தி - 6 இன் கீழ், சாட்சியங்களை சேகரிப்பதற்கான ஏற்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில், மனித உரிமைகள் பேரவையின்கீழ் விசேட நிபுணர்கள் நியமிக்கப்படவுள்ளனர். தற்போதைய சூழலில், சிங்கள பெரும்பான்மை பலத்துடன் இருக்கின்ற ஓர் ஆட்சியாளரை எவ்வாறு அணுகுவது? - என்னும் பிரிசீலனையின் விளைவாகவே இவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழர் தரப்பு கோருகின்ற விடயங்களை முன்னெடுக்கக்கூடிய நிலையில் தற்போதைய சர்வதேச சூழல் இல்லை. இதனை விளங்கிக்கொள்ளாது, விடயங்களை மேலோட்டமாக பார்ப்பதும், தமிழ் கட்சிகளும் புலம்பெயர் அமைப்புக்கள் கேட்கும் அனைத்தையும் சர்வதேச நாடுகள் செய்யவேண்டுமென்று எதிர்பார்ப்பதும் அடிப்படையிலேயே, சர்வதேச சூழலை விளங்கிக்கொள்ள முடியாமையின் வறுமையாகும்.

இந்தப் பிரேரணை மட்டுமல்ல, இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட அனைத்து பிரேரணைகளுமே, இலங்கையின் பொறுப்புகூறல் விவகாரத்தை இலங்கைக்குள் கையாளும் நோக்கத்தையே கொண்டிருந்தன. உள்ளக மட்டத்தில் ஒரு விடயத்தை மேற்கொள்ளவேண்டுமாயின், சர்வதேசத்துடன் ஒத்துழைக்கக்கூடிய அரசாங்கமொன்று ஆட்சியில் இருக்கவேண்டியது அவசியமாகும். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஆட்சிய மாற்றத்தை தொடர்ந்து, புதிய அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் சில விடயங்களில் இணங்கிச் செயற்படக்கூடிய சூழல் ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்த ஆட்சி உறுதியானதாக இல்லாமையினால், விடயங்களை எதிர்பார்த்ததுபோன்று, முன்னெடுக்க முடியவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்திக்கொள்வதில் கூட்டமைப்பும் வினைத்திறனுடன் செயல்பட்டிருக்கவில்லை.

ஒருவேளை, இந்தப் பிரேரணையின் உள்நோக்கம் ஆட்சிமாற்றம்தானா? இதனை உறுதியாக கூறமுடியாது ஆனால், உலகத்துடன் இணங்கிப்போக மறுக்கின்ற ஓர் அரசாங்கத்துடன் எவ்வாறு பொறுப்புக்கூறல் விடயத்தை முன்னெடுக்க முடியும்? இந்தக் கேள்வியின் அடிப்படையில்தான், விடயங்கள் அனைத்தும் கையாளப்படும்.

# ஜெனிவா தீர்மானம்: அரசின் நிராகரிப்பு!

- அலசுவது **இராஜதந்திரி** -

*இலங்கை அரசு, ஜெனிவாவில் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கைமீதான 46-1 தீர்மானத்தை நிராகரித்துள்ளது. இதன்மூலம் வடக்கு-கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதில் துணைநின்ற சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசு பிரதியுபகாரமாக தனது நன்றியில்லா தன்மையை புலப்படுத்தியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*ஜெனிவா தீர்மானத்தை தவறான கண்கொண்டு நோக்கியமை இலங்கை அரசு மேற்கொண்ட முதலாவது தவறு. தற்போது, இலங்கை மீதான 46-1 தீர்மானத்தை நிராகரித்துள்ளமை இரண்டாவது தவறாகும். ஜெனிவா தீர்மானத்தை நிராகரித்துள்ளதன் மூலம் இலங்கை அரசு சர்வதேச சமூகத்தையும் அவமதித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. தீர்மானத்தை கொண்டுவந்து அதனை வெற்றி காணவைத்த பிரிட்டன், பொறுப்புக்கூறலை இலங்கை அரசு மேற்கொள்ளவதோடு, நல்லிணக்கத்தை பலப்படுத்தி, இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பலமூட்டும் விதத்திலேயே தனது பங்களிப்பை வழங்கியுள்ளது.*

**இலங்கையின் நிராகரிப்பு**

*ஆனால், சர்வதேச சமூகத்தின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எப்போதுமே சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் இலங்கை, தற்போது ஜெனிவா தீர்மானத்தை நிராகரித்துள்ளது. இதுவரை காலமும் இலங்கைமீது கொண்டுவரப்பட்ட ஜெனிவா தீர்மானங்களை இலங்கை அரசு நிராகரிகரித்திருக்கவில்லை. கடந்த கால தீர்மானங்களை இலங்கை அரசு நிறைவேற்றத் தவறியிருக்கலாம். ஆனால், நிராகரித்திருக்கவில்லை. இத்தடவை, தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்திருப்பதன் மூலம் ஜனநாயக நடைமுறைகளில் அதன் நம்பிக்கையற்ற தன்மையை வெளிப்படுத்தியுள்ளதோடு, மனித உரிமைகளை மேம்படுத்துவதிலும் எவ்வித அக்கறையும் இல்லை என்பதையே நிரூபித்துள்ளது.*

*எது எப்படியிருந்தபோதிலும், இத்தடவை தீர்மானத்தில் குற்றவியல் நீதிமன்றுக்கான பொறிமுறை உள்ளடக்கப்பட்டுள்ளமை இலங்கை அரசுக்கு ஓர் எச்சரிக்கையை விடுப்பதாகவும், எதிர்காலத்தில் இலங்கை தன்னை உரிய வகையில் சர்வதேச சமூகத்தில் நிலைநிறுத்தவேண்டியதன் அவசியத்தை எடுத்துரைப்பதாகவுமே அமைந்துள்ளது.*

**அட்மிரல் ஜயநாத் கொலம்பகே**

*இத்தடவை ஜெனிவா தீர்மானத்தை இலங்கை அரசு கையாண்ட விதம் பெரும்பாலான இலங்கையருக்கே கவலையளிப்பதாக இருந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், தீர்மானத்தைக் கையாண்டது, இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளராக இருக்கும் இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியான அட்மிரல் ஜயநாத் கொலம்பகே என்பது குறிப்பிடத்தக்கது. வெறுமனே யுத்த அனுபவத்தை மட்டுமே கொண்டவராக இருந்ததோடு வடக்கு-கிழக்கு யுத்தத்தில் முழுமையாக தன்னை ஈடுபடுத்தியவரே அட்மிரல் ஜயநாத் கொலம்பகே.*

*எனவே, யுத்த குற்றச்சாட்டுக்குள்ளாக்கப்படக்கூடிய ஒருவரே வெளிவிவகார அமைச்சு செயலாளராகவுமிருந்து ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தை கையாண்டுள்ளதோடு, வெளியுறவுத்துறையில் தமது அனுபவமின்மையையும் வெளிப்படுத்தியுள்ளார்.*

*அட்மிரல் கொலம்பகேயின் வெளியுறவுச் செயலாளர் பதவி என்பது இராணுவ பின்னணியைக்கொண்ட நியமனமாக இருக்கின்ற நிலையில் தென்னிலங்கை அரசியல் வட்டாரங்கள் ஜெனிவா விவகாரத்தை உரிய இராஜதந்திரத்தோடு வெளியுறவு அமைச்சு கையாள தவறிவிட்டுள்ளதென்ற அபிப்பிராயத்தை வெளிப்படுத்தியுள்ளன. ஆகவே, ஜெனிவா தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு செயலாளரது பங்களிப்பை நோக்கும்போது, 'வழக்கறிஞரும் அவரே. குற்றவாளியும் அவரே' என்பதுபோன்ற நிலையில் அட்மிரல் கொலம்பகே இருந்து வருவதையே அவதானிக்க முடிகின்றது.*


**புதிய உள்ளடக்கம்**

*இதேவேளை, இலங்கைமீது கொண்டுவரப்பட்ட இம்முறை தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்துள்ளதன் மூலம், இராஜதந்திர ரீதியாக இலங்கை கொண்டுள்ள கையாலாகாத்தனத்தை வெளிப்படுத்துவதோடு, எதிர்காலத்தில் சர்வதேச அரங்குகள் பலவற்றிலும் புறக்கணிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலையும் இலங்கை எதிர் கொண்டுள்ளதென்றே கருதக்கூடியதாக இருக்கின்றது.*

*ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நிராகரித்துள்ளது. அதேசமயம் மறுபுறத்தே, குற்றவியல் நீதிமன்றுக்கான பொறிமுறை இத்தடவை முதல் தடவையாக தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இப் பொறிமுறையின் உள்ளடக்கமானது, இலங்கைக்கு பெரும் எச்சரிக்கையாக இருக்கின்றது. அத்துடன் இலங்கையின் எதிர்க்கட்சி குறிப்பிட்டது போல, சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இலங்கைமீது அதிகரிக்கக்கூடிய சூழல் பலமடையக்கூடிய தன்மையும் அதிகரித்துள்ளதையே அவதானிக்க முடிகின்றது.*

*இந்நிலையில், இலங்கை தொடர்ந்தும் ஜெனிவா தீர்மானம் 46-1 குறித்து சவால் விடும் போக்கை கைவிட்டு, சர்வதேச அரங்கில் தனது கௌரவமான இருப்பை கருத்தில் கொண்டு புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதே ஒரு சிறந்த இராஜதந்திர அணுகுமுறையாக அமையும் எனக் கருதலாம்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
பயணத்தால் சிறிய நன்மை கிட்டும். வருமானம் பெருகும். உறவினரால் உதவி கிடைக்கும். வியாபாரிகளின் சிக்கல் தீரும். முன்னேற்றத்திற்கு புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**இடபம்**
தைரியம் கூடும். அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். எதையாவது கற்பனை செய்து வீண் குழப்பம் அடையாதீர்கள். பணியிட வேலைகளில் கவனமாக இருப்பது அவசியம்.

**மிதுனம்**
வேலைகளை அடுத்தவர்களை நம்பி ஒப்படைக்க வேண்டாம். வெளிநாட்டிலிருந்து வருமானம் வர அதிகம் வாய்ப்பு உண்டு. பெற்றோரின் ஆரோக்கியம் நல்ல முறையில் இருக்கும்.

**கடகம்**
சொத்து வாங்க செய்த முயற்சிகள் விருப்பப்படி நிறைவேறும். பூசம்: திருமணம் பற்றிய பேச்சுக்கள் நல்லபடியாக முடியும். பயம் தீரும். உங் கள் வேலையை வேறு ஒருவரிடம் ஒப்படைக்காதீர்கள்.

**சிம்மம்**
மற்றவர் பணியை நீங்களே செய்ய வேண்டிய சூழ்நிலை அமையும். பணியாளர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு கிடைக்கும். மாணவரின் படிப்புக்கு உதவி செய்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**கன்னி**
சற்றும் எதிர்பாராமல் நல்ல வரன் அமையும். உங்களின் புகழ் கூடும். முன்பிருந்த மனக்குறைகள் தீரும். பிறருக்கு அறிவுரை சொல்லாமல் இருப்பது நல்லது.

**துலாம்**
திருமணம் முடிவாகும். மனஅழுத்தம் வந்து நீங்கும். தடைப்பட்டு வந்த நல்ல விஷயங்கள் நடக்க ஏற்பாடாகும். பணவரவு உண்டு. தர்ம செயல்கள் செய்வீர்கள்.

**விருட்சிகம்**
மனக் கசப்புக்கள் அகலும். சுபச்செலவுகள் செய்வீர்கள். கலகலப்பான சூழலை அனுபவிப் பீர்கள். குறை தீரும். குடும்பத்தினருடன் புரிதல் ஏற்பட்டு மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
வாழ்க்கைத்துணையின் உடல்நலனில் சிறு பிரச்னை ஏற்பட்டு சரியாகும். புதியவர்களின் அறிமுகம் கிடைத்து கலகலப்பு கூடும். உடல்நல பிரச்னை ஒன்று சிகிச்சைக்குப் பிறகு குணமாகும்.

**மகரம்**
புதியவர்களிடம் எச்சரிக்கையாக இருந்தால் நல்லது. உங்களின் கலகலப்பான சுபாவத்தால் நட்பு வட்டம் விரியும். குழப்பங்கள் அகலும். கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
புதிய வாகனங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டு. வீடு மாற்றம், இடமாற்றம் செய்யலாமா என்று சிந்திப் பீர்கள். நினைக்க இயலாத யோகங்கள் வரலாம். பொறுப்புகள் கூடும்.

**மீனம்**
சக ஊழியர்களின் குடும்ப விஷயங்களில் தலையிடாதீர்கள். யாரிடமும் தேவையற்ற பேச்சுக்களை பேச வேண்டாம். வெளிநாட்டிலிருந்து சந்தோஷ செய்தி வந்து சேரும்.

# நீதிபதிகளே வரும் தேர்தலில் நல்ல தீர்ப்பை வழங்குங்கள்

## மக்கள் மத்தியில் ஓ.பி.எஸ். பிரசாரம்

சென்னை, மார்ச் 26

**நல்லாட்சி எது என்று தீர்ப்பு வழங்கும் நீதிபதிகளான வாக்காளர்கள், வரும் தேர்தலில் நல்ல தீர்ப்பை வழங்கவேண்டும் என தருமபுரியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தமிழகத் துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்தார்.**



தருமபுரி மாவட்டத்தின் 5 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் போட்டியிடும் அ.தி.மு.க மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களான கே.பி.அன்பழகன் (பாலக்கோடு), ஜி.கே.மணி (பென்னாகரம்), வெங்கடேஸ்வரன் (தருமபுரி), கோவிந்தசாமி (பாப்பிரெட்டிப்பட்டி) மற்றும் சம்பத்குமார் (அரூர்) ஆகியோருக்கு ஆதரவு கேட்டு தருமபுரி 4 சாலை சந்திப்புப் பகுதியில் தமிழகத் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வாகனத்தில் இருந்தபடியே பிரசாரம் மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் அவர் பேசும்போது, ‘தொலைநோக்குத் திட்டங்கள் பலவற்றைத் தமிழகத்தில் நிறைவேற்றிய அரசு அதிமுக அரசு. பெண்கள், விவசாயிகள் எனப் பல்வேறு தரப்பினரின் நல்வாழ்வுக்குப் பல வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

நல்ல ஆட்சி தந்தது யார் என்ற தீர்ப்பை வழங்கும் நீதிபதிகள் வாக்கா ளர்கள்தான். எனவே, வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் நல்ல தீர்ப்பை வழங்குங்கள்.

தி.மு.கவின் தேர்தல் அறிக்கை கள்ள நோட்டு, அது செல்லாது. அ.தி.மு.கவின் தேர்தல் அறிக்கை தான் நல்ல நோட்டு. மீண்டும் அதிமுக. ஆட்சி அமைந்ததும் திருமண நிதி உதவி, மகப்பேறு நிதி உதவி ஆகியவை உயர்த்தி வழங்கப்படும்-என்றார்.

# பிரசாரத்துக்கு செல்ல முன்பே என்னை மிரட்டுகின்றார்கள்

## மதுரையில் நடிகர் கார்த்திக் பேட்டி

மதுரை, மார்ச் 26

தேர்தல் பிரச்சாரத்துக்குச் செல்வதற்கு முன்பே என்னை மிரட்டுகிறார்கள் என மனித உரிமைக் காக்கும் கட்சி தலைவரான நடிகர் கார்த்திக் கூறினார்.

மதுரை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

அனைத்து சமூகத்திலும் இட ஒதுக்கீடு கட்டாயம் வேண்டும். சாதி அடிப்படை இன்றி பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கும் இட ஒதுக்கீடு வழங்கினால் நல்லது. நான் சார்ந்த சமூக மக்களுக்கு ஏதாவது நல்லது செய்யுங்கள் எனக் கூறி பிரசாரத்துக்கு வந்துள்ளேன்.



நடிகர்கள் சாதி, மதம் இனம் என பாகுபாடு இன்றி பொதுவானவர்கள். நானும் அரசியலுக்கு வருவதற்கு முன் அப்படித்தான். நான் சார்ந்த மனித உரிமை கட்சி முக்குலத்தோருக்கானது. இங்கு சாதிக்காக இல்லாவிட்டாலும் அனைத்து சமுதாய மக்களுக்காக வும் குரல் கொடுத்து வருகிறேன். நான் வசதியாக உள்ளேன். எனக்கு எந்தவிதத் தேவையும் இல்லை. ஆனால், நலிவடைந்த, பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களுக்கு கிடைத்தால் மிகவும் நன்றாக இருக்கும். முதல்வர் பழனிசாமி தேர்தலில் பாட்டியிட எனக்கு சீட் தருகிறேன் எனக் கூறினார். ஆனால், நான் பிரசாரத்துக்கு மட்டும் வருகிறேன் என்று கூறி தற்போது வந்துள்ளேன்.

கோவில்பட்டியில் பிரச்சாரம் செய்ய உள்ளேன். என்னுடன் இருந்த ஏராளமான பேர் மாற்றுக் கட்சிக்குச் சென்று விட்டனர். ஆனால்சரணாலயம் அமைப்பில் என்னுடன் கூட இருக்கும் உண்மைத் தொண்டர்கள் அப்படியே இன்றும் இருக்கிறார்கள்.

பிரசாரத்துக்குச் செல்வதற்கு முன் என்னை மிரட்டப் பார்க்கிறார்கள். கம்பு சுத்தி ரொம்ப நாளாயிற்று. சுற்றிப் பார்க்க (சிலம்பம்) வேண்டும் என்று கூறியுள்ளேன்-என்றார்.



# தி.மு.க கூட்டணி வெற்றி பெறும்?

சென்னை, மார்ச் 26

தமிழக தேர்தல் களம் சூடுப்பிடித்துள்ள நிலையில், இம்முறை தி.மு.க கூட்டணி வெற்றி பெரும் என கருத்துக்கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. “ரைம்ஸ் நவ் தொலைக்காட்சியும், சி வோட்டர் நிறுவனமும் இணைந்து நடத்திய கருத்துக்கணிப்புகளின் அடிப்படையில் மேற்படி தகவல் வெளியாகியுள்ளது. இதன்படி தி.மு.க கூட்டணிக்கு 177 இடங்களும், அ.தி.மு.க கூட்ட ணிக்கு 49 இடங்களும், மக்கள் நீதி மய்யத்துக்கு 3 இடங்களும், அ.ம.மு.க. கூட்டணிக்கு 3 இடங்களும் ஏனைய கூட்டணி கட்சிகளுக்கு 2 இடங்களும் கிடைக்கப்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்கு வீதத்தை பொறுத்தவரை தி.மு.க கூட்டணி கட்சிகளுக்கு 46 சத வீத வாக்குகளும், அ.தி.மு.க கூட்ட ணிக்கு 34.6 சதவீத வாக்குகளும் கிடைக்கப்பெறும் எனவும் குறிப் பிடப்பட்டுள்ளது.

# தமிழகம் வருகிறார் பிரியங்கா



சென்னை, மார்ச் 26

பிரியங்கா உள்ளிட்ட தலைவர்கள், தமிழகத்தில் பிரசாரம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதால், தமிழக காங்கிரஸ் தலைவர் அழகிரி நேற்று முதல் 29ஆம் திகதி வரை பிரசாரத்தை ரத்து செய்துள்ளார்.

தமிழக சட்டசபை தேர்தல் பிரசாரத்திற்காக, ராகுல், பிரியங்கா, மற்றும் முன்னனி காங்கிரஸ் தலைவர்கள் தமிழகம் வர உள்ளனர். அதற்கான கூட்ட ஏற்பாடுகளை செய்வதற்காக, என் தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் நேற்று முதல், வரும், 29ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்படுகிறது. என் அடுத்த கட்ட சுற்றுப்பயண விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அழகிரி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டறிய விசாரணைகள் அவசியம்

## சஜித் பிரேமதாஸ வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 26

ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரிகளை கண்டறியும் வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தேவையேற்படின் சர்வதேச கண்காணிப்பாளர்களையும் இணைத்துக்கொள்ளுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 21-4 பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான 2ஆம் நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“அமெரிக்காவில் நடைபெற்ற செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, பிரதான சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டனர். விசாரணைக் குழுவின் அறிக்கையும் முழுமையாக வெளியிடப்பட்டது. செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கையை புத்தகக் கடைகளில் கூட வாங்கலாம்.

ஆனால் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை இன்னும் முழுமையாக சமர்ப்பிக்கப்படவில்லை. இணைப்புகள் ஒளிக்கப்படுகின்றன. சுயாதீன விசாரணை அரசியல் மயப்படுத்தப்படுகின்றது. இதனை ஏற்கமுடியாது. தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள், திட்டமிட்டவர்கள் என அனைவரையும் கண்டறியவேண்டும்.” என்றும் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.





வவுனியா - நெடுங்கேணி - ஒலுமடு இரட்ணம் பவுண்டேசன் நிறுவனத்தால் சிவனருள் இலவச கல்வி நிலையத்தின் ஒரு பகுதியாக இலவச கணனி பயிற்சி வகுப்பு கடந்த 20 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இதில் வவுனியா வடக்கு வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் ச. சிவராசா கலந்து கொண்டு வகுப்பறையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் இலவச பயிற்சி பெறும் மாணவர்களும் பங்கேற்றனர்.

# முதலாம் தவணை பாடசாலை விடுமுறை ஏப்ரல் 9இல் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 26

ஏப்ரல் 9ஆம் திகதி முதல் முதலாம் தவணைக்காக அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி இரண்டாம் தவணைக்காக பாடசாலைகள் அனைத்தும் ஏப்ரல் 19ஆம் திகதி திறக்கப்படும் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேல் மாகாண பாடசாலைகளில் அனைத்துத் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகள் மார்ச் 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல் மாகாணத்தில் பாடசாலைகளை மீண்டும் திறக்க கல்வி அமைச்சு நேற்று புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி 15 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட வகுப்புகளை தினசரி அடிப்படையில் நடத்தலாம்.

16-30 மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு வாரத்திற்கு ஒரு ஒரு குழுவுக்கு மட்டுமே வகுப்புகளை நடத்த முடியும்.

30 க்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட வகுப்புகள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சம எண்ணிக்கையிலான நாள்களில் வகுப்புகளை நடத்த முடியும்.

ஏதேனும் ஒரு பகுதி தனிமைப்படுத்தப்பட்டிருந்தால் அந்தப் பகுதி பாடசாலைகள் மூடப்படும் என்று அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு புத்தாண்டு விடுமுறை ஏப்ரல் 9 முதல் 19 வரை பத்து நாள்களுக்கு மட்டுப்படுத்தப்படும் என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(அ)

# வாகனத்தில் இருந்து விழுந்து 5 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 26

வெள்ளவாய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரந்தகொல்ல ஹூனுகெட்டிய பகுதியில் முன்பள்ளி மாணவர்களை பாடசாலை நிறைவடைந்து ஏற்றிச் சென்ற வாகனத்தின் கதவு வழியாக, வீதியில் தவறி விழுந்து ஐந்து வயதுச் சிறுமியொருவர் நேற்று பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வெள்ளவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# ஐ.நா .முன்பாக இலங்கை விவகாரத்தை முதலில் கொண்டுபோனவர் மஹிந்தவே!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 26

இலங்கைக்குள்ளான விவகாரங்களை முதன்முதலில் சர்வதேச சமூகத்தின் முன்பாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வாலேயே கொண்டு செல்லப்பட்டது என்பதை ஐக்கிய மக்கள் சக்தி நேற்று சுட்டிக்காட்டியது.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர், லக்ஷ்மன் கிரியெல்ல, 1989 இல் காணாமல்போனோர் பட்டியலை உலகளாவிய சமூகத்திடம் சமர்ப்பித்து, இலங்கையை ஐக்கிய நாடுகளின்



மனித உரிமைகள் பேரவையில் அறிமுகப்படுத்தியது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷதான் என்றும், உள் விடயங்களை எடுத்துக்கொள்வதற்கும் அவரே பொறுப்பு என்றும் கூறினார்.

மனித உரிமைகள் பேரவை ஆணையாளரர் அலுவலகத்தின் அறிக்கை பதினேழுரை பக்கங்களை கொண்டது. அதில் வெறும் இரண்டரை பக்கங்களில் மட்டுமே புலிகளுடனான மோதல் தொடர்பான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. எஞ்சிய 15 பக்கங்கள் கோட்டாபய ஜனாதிபதியான தன் பின்னர் ஜனநாயகம், ஊடக சுதந்திரம் மற்றும் நாட்டில் சிறுபான்மையினர் மீதான அநீதிகள் குறித்தே பேசப்பட்டுள்ளது - என்றார்.

(அ)

# இரு ட்றோலர் படகுகளுடன் 20 இந்திய மீனவர்கள் கைது!

கிளிநொச்சி, மார்ச் 26

கிளிநொச்சி, பூநகரி இரணை தீவு கடற்பரப்பில் இரண்டு ட்றோலர் படகுகளு டன் 20 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துமீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை ஆரம்ப கட்ட விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(அ)

செய்திகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள உங்கள் கைபேசிகளில்
ஈழநாடு APP ஐ
Google Play APP இல் eelanadu என்று தேடி
Download செய்யுங்கள்



# போலி ஆவணங்கள் பயன்படுத்தி வாகன விற்பனை; நால்வர் கைது

கொழும்பு, மார்ச் 26

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அவற்றுக்கான போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்த நால்வர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகபேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

குருநாகலைச் சேர்ந்த குறித்த சந்தேகநபர்கள் நீண்ட நாட்களாக இவ்வாறு மோசடி செய்துள்ளதாக விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

அத்தோடு இவர்கள் கொள்ளையிடும் வாகனங்களின் இலக்க தகடுகளை மாற்றி அவற்றையும் விற்பனை செய்துள்ளனர். சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒகஸ்ட் மாதத்தில் மாகாணத் தேர்தல்!

## விரைவில் அமைச்சரவைப் பத்திரம்

கொழும்பு, மார்ச் 26

**மாகாணசபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேவையான சட்டத்திருத்தம் அடங்கிய பிரேரணை இன்னும் இரு வாரங்களில் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது என அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், அதனை பாராளுமன்றத்தில்சமர்ப்பித்து அங்கும் உரிய வகையில் நிறைவேறிய பின்னர் ஒகஸ்ட் மாதமளவில் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

சுமார் 3 ஆண்டுகளாக ஒத்திவைக்கப்பட்டுவரும் மாகாணசபைத் தேர்தலைவிரைவில்நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஏற்கனவே பணிப்புரைகளை விடுத்துள்ளனர்.

இதன்படி விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் பூர்வாங்க பணிகளை முன்னெடுத்துள்ளார். கட்சித் தலைவர்களுடனும் இது சம்பந்தமாக அவர் விரைவில் பேச்சு நடத்தவுள்ளார்.

வடக்கு, கிழக்கு உட்பட 9 மாகாணசபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டு காலத்தில் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்

## பொலிஸார் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் தொற்று நோய் அச்சம் சமூகத்தில் இன்னும் நிலவுவதன் காரணத்தினால் சிங்கள - தமிழ் புத்தாண்டு காலத்தில் சுகாதார வழிகாட்டல்களை அவசியம் பின்பற்றுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் சுகாதார வழிகாட்டுதல்களை மீறியதற்காக கடந்த ஆண்டு ஒக்ரோபர் 31 முதல் நேற்று முன் தினம் வரையான காலப் பகுதியில் 3,391 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

புத்தாண்டு காலப் பகுதியில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளமையால் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அத்துடன் முகக் கவசங்களையும், சமூக இடைவெளியையும் அவசியம் கடைபிடிக்கவேண்டும் என்றும் பொலிஸார் கேட்டுள்ளனர்.

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையையும் இலங்கை விரைவில் இழக்கும்!

## எச்சரிக்கிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, நாடு ஜி. எஸ்.பி பிளஸ் வர்த்தக சலுகையை இழக்கக்கூடும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க எச்சரித்துள்ளார்.



கொழும்பில் ஊடகங்களுடன் பேசிய சம்பிக்க ரணவக்க, ஒழுங்கமைக்கப்பட்ட வேலைத் திட்டம் இல்லாததால், உலக அரங்கில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது-என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

12,000 முன்னாள் போராளிகளை விடுவிப்பது போன்ற குறுகிய பார்வை முடிவுகளுடன், அரசாங்கம் தமிழ் அரசியல் பரப்பை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

முஸ்லீம் அரசியல் பரப்பைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் சஹ்ரான் ஹாஷிம் உள்ளிட்ட தவ்ஹீத் ஜமாத் குழுக்களுக்கும் அரசாங்கம் சம்பளம் வழங்கியது.

உள்ளூர் மற்றும் சர்வதேச பங்காளிகளுடன் அரசாங்கம் பணியாற்ற வேண்டும் என்றும் எல்.எல்.ஆர்.சி அறிக்கை மற்றும் டெஸ்மண்ட் சில்வா அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயல்படுத்த வேண்டும்-என்றார்.



# நீர்தேக்கத்தில் இருந்து பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மார்ச் 26

தலவாக்கலை மேல் கொத்மலையில் நீர்தேக்கத்தில் இருந்து பெண்ணின் சடலமொன்றை தலவாக்கலை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய தலவாக்கலை சுமண

சிங்கள வித்தியாலயத்திற்கு அருகிலே இவ்வாறு அடையாளம் தெரியாத பெண் ஒருவரின் சடலத்தை நேற்றுக் காலை பொலிஸார் மீட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்வதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பொன்சேகாவிடம் 1 பில்லியன் இழப்பீடு கோரும் முரளிதரன்!

கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவிடம் 1 பில்லியன் ரூபா இழப்பீடு கோரி தனது சட்டத்தரணி ஊடாக கடிதம் அனுப்பியுள்ளார் முத்தையா முரளிதரன்.

அண்மையில் பொன்சேகா தெரிவித்த கருத்தொன்று தனது நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியதாக தெரிவித்தே இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

# சட்டவிரோதமான சிறுநீரக விற்பனையில் சிக்கவுள்ள தனியார் வைத்தியசாலைகள்!

கொழும்பு, மார்ச் 26

சுற்றுலா விசாக்களில் இலங்கைக்கு வரும் இந்தியப் பிரஜைகள் சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக விற்பனையில் ஈடுபடுவது தொடர்பாக சிறப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் நேற்று முன் தினம் நீதிமன்றத்துக்கு அறிவித்தனர்.

நேற்று முன் தினம் கொழும்பு மேலதிக நீதிவான் ரஜீந்திர ஜெயசூரிய முன்னிலையில் பொலிஸார் இந்த தகவலை வழங்கினர்.

கொழும்பில் உள்ள பல முன்னணி தனியார் மருத்துவமனைகளில் சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும், இதுபோன்ற சிறுநீரக மாற்று சிகிச்சைகளுடன் தொடர்புடையவர்களை கண்டுபிடிப்பதற்கான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் பொலிஸார் நீதிமன்றத்திற்கு தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட தனியார் மருத்துவமனைகளில் நீண்டகாலமாக சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருவது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு உட்பட்டு இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களனி திஸ்ஸ மின்நிலையம் ஏப்ரல் முதல் மீண்டும் தேசிய மின் கட்டமைப்பின் கீழ்

கொழும்பு, மார்ச் 26

களனி திஸ்ஸ இரட்டை சக்கர மின்நிலையம் ஏப்பரல் 4ஆம் திகதி மீண்டும் தேசிய மின்கட்டமைப்புடன் இணைக்கப்படவுள்ளது. தொழில் நுட்பக் கோளாறு காரணமாக செயலிழந்த இந்த மின்நிலையம்

வழமை நிலைக்கு கொண்டு வரப்பட்டு பரிசோதனை மட்டத்தில் உள்ளது. 2003 ஆம் ஆண்டு மின் உற்பத்தியை ஆரம்பித்த இந்த மின்நிலையம் 165 மெகாவொட் கொள்ளளவைக் கொண்டதாகும். மின் சக்தி அமைச்சின் திட்டமிடல் குழுவின் அனுமதியுடன் டுபாய் நாட்டு நிறுவனம் ஒன்றுக்கு திருத்தப்பணிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி ஏற்றுமதியை நிறுத்தியது இந்தியா! இலங்கைக்கு பாதிப்பா?

கொழும்பு, மார்ச் 26

இந்தியாவில் தடுப்பூசி ஏற்றுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள போதிலும் முன்பதிவு செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் தாமதமின்றி இலங்கையை வந்து சேரும் என இராஜாங்க அமைச் சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

உள்நாட்டில் தடுப்பூசிக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனகா தடுப்பூசிகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பணிகளை எதிர்வரும் ஏப்ரல் இறுதி வரை இந்தியா தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இந்த நிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளவதில் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், இலங்கைக்கு தடுப்பூசிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என இந்தியா உறுதி அளித்துள்ளதாக சன்ன ஜயசுமண தெரிவித் துள்ளார். அதன்படி, இலங்கையினால் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்காக முன்பதிவு செய்யப்பட் டுள்ள 10 இலட்சம் தடுப்பூசிகள் தாமதமின்றி இலங் கையை வந்து சேரும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# 72 நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்க நீதிமன்ற சேவை ஆணைக்குழு முடிவு

கொழும்பு, மார்ச் 26

நீதவான் நீதிமன்ற நீதிபதிகள் உட்பட 72 நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்க நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வருடாந்த இடமாற்றத்தின் அடிப்படையில் ஏப்ரல் மாதம் 5 திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் கொழும்பு பதில் பிரதான நீதவான் ஆர்.எம். எஸ்.பி சந்திரசிறி கொழும்பு பிரதான நீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தொல்லியல் அகழ்வை உடனே கைவிடவேண்டும் அரசு!

கொழும்பு, மார்ச் 26

வடக்கில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள் ளப்படும் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களான சி. சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் சபையில் வலியு றுத்தினர்.

அவர்கள் மேலும் தெரி வித்ததாவது:-

குறிப்பாக கிளிநொச்சி, உருத்திரபுரம் சிவன் ஆலயத் தில் தொல்லியல் திணைக்களத் தால் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சிப் பணிகளால் அங்குள்ள மக்கள் மிகவும் கோபாவேசமடைந்துள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கைக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடு பட்டுள்ளனர்.

குறித்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் இது தொடர்பில் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் இடம்பெறும் தொல்லியல் அகழ்வு ஆராய்ச்சிப் பணிகளில் தொல்லியல் துறையினரை விட வும் இராணுவத்தினரே அதிக அக்கறை கொண்டுள்ளனர்- என்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பின ரான த.கலையரசன் இவ்விட யம் தொடர்பில் உரையாற்று கையில், தொல்லியல் திணைக் களத்தின் பணியில் ஏன் இராணுவத்தினர் ஈடுபடுகின்ற னர்? நாம் சமாதானத்தை விரும்புகின்றோம். அதே போன்றே

எமது ஆலயங்களும் சமா தானத்தையே வலியுறுத்துகின் றன" - என்றார்.

அதேபோன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினரான செல்வ ராசா கஜேந்திரன் உரையாற்று கையில்,

3500 ஆண்டுகள் பழைமை யான உருத்திரபுரம் சிவன் கோயிலில் அகழ்வு ஆராய்ச்சி செய்து சிங்களவர் பகுதியாக்க முற்படுகின்றனர். இது வட பகுதி மக்கள் மத்தியில் அச்சத் தையும் கோபத்தையும் ஏற் படுத்தியுள்ளது.

வடக்கிலுள்ள இது தொடர் பான அதிகாரிகளுடன் எந்த வித கலந்துரையாடல்களையும் செய்யாது பிக்குகள் மற்றும் இராணுவத்தினரின் தலையீடு களுடன் தமிழர்களின் வரலாறு களை திரிவுபடுத்தும் முயற்சி களே முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் கருவியாக தொல்லி யல் திணைக்களம் பயன்படுத் தப்படுகிறது" - என்றார்.

# 30 வருடகாலப் போரினால் பாதிப்புற்ற மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு வாய்ப்பு

## சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டு

**லண்டன், மார்ச் 26**

**ஐ.நா. மனித உரிமைகள் பேர வையில் இலங்கைக்கு எதி ராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் 30 வருட காலப் போரி னால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான நீதி வழங்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச மன்னிப் புச்சபை தெரிவித்துள்ளது.**

இந்த நிலையில், புதிய தீர் மானத்தில் முன்வைக்கப்பட் டுள்ள பரிந்துரைகளை முழுமை யாக நடைமுறைப்படுத்துவ தற்கு இலங்கை அரசாங்கம் முன்வரவேண்டும் என்றும் அந்தச் சபை வலியுறுத்தியுள் ளது.

அதேவேளை, அதிலிருந்து தவறும் பட்சத்தில் மனித உரிமைகள் பேரவையினால் சுயாதீனமான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று நிறுவப் படக்கூடும் என்றும் அந்தச் சபை எச்சரிக்கை விடுத்துள் ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட 46-1 தீர்மானம் 11 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவை யில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கும் புதிய தீர்மானம் மிக முக்கிய மான முன்நகர்வு என தெரிவித் துள்ளது.

இலங்கையின் மனித உரி மைகள் நிலைவரம் இந்தத் தீர்மானத்தின் ஊடாக சர்வ தேசத்தின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதாகவும் அந் தச் சபை தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி நீதியையும் பொறுப்புக்கூறலை யும் நிலைநாட்டுவதற்கான ஆதாரங்களை ஐ. நா. மனித உரிமைகள் அலுவலகம் திரட்டு வதற்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கடந்த காலத்தில் இடம்பெற்ற மற்றும் தற்போது இடம்பெறும் மீறல் களுக்குப் பொறுப்பானவர்கள் தொடர்ந்தும் தண்டனைகளில் இருந்து தப்பிக்கும் நிலை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது என்ற சமிக்ஞை இந்தத் தீர்மானத்தின் ஊடாக தெளிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும் என அந்தச் சபை வலியுறுத்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக இலங்கையின் மனித உரிமை நிலைவரங்கள் கண்காணிக்கப் படுவதுடன், கடந்தகால மீறல் கள் தொடர்பான ஆதாரங் களும் திரட்டப்படும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை அந்த அறிக்கையில் தெரிவித்துள் ளது.

# அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர்களின் நிலங்கள் அபகரிப்பதை நிறுத்தவேண்டும்!

## சாணக்கியன் சபையில் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 26

வடக்கு, கிழக்கில் அரசாங் கத்துடன் இணைந்து செயற் படும் பாராளுமன்ற உறுப்பினர் கள் தொல்பொருள் என்ற பெய ரில் தமிழ் மக்களின் வளங்கள் சுரண்டப்படுவதற்கு உறுதுணை யாக இல்லாமல் அதற்கு எதி ராகக் குரல் கொடுக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் இரா.சாணக்கியன் தெரி வித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரே ரணை மீதான விவாதத்தில் பங் கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

இன்று வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்துள் ளனர். தேசியப் பட்டியலில் ஒரு வருடன் சேர்த்து ஐவர் இருக் கின்றனர்.

உண்மையிலேயே இந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர் களும் இந்த அரசாங்கத்திற்கு பாரிய அழுத்தத்தை கொடுக்க வேண்டும். வடக்கு, கிழக்கிலே அபிவிருத்திப் பணிகளை செய் வதற்கு அவர்கள் முன்வரவேண் டும்.

எங்கள் பாரம்பரியமான நிலங்களை அபகரிப்பதற்கு, அதேபோன்று எங்களுடைய மதஸ்தலங்களினுடைய அப கரிப்பு செய்வதனை நிறுத்தி விட்டு உண்மையிலேயே முழுமையான அபிவிருத்தித் திட்டங்களை கொண்டுவரு வதற்கு முயற்சிக்க வேண்டும்.

உதாரணமாக தொல்பொருள் திணைக்களத்தினால் அன்பு முனை என்று சொல்லப்படும் ஒரு குளம் இன்று வரை, நிதி ஒதுக்கப்பட்டும் புனரமைப்பு செய்ய முடியாத நிலை காணப் படுகின்றது அதற்குரிய



காரணம் தொல்பொருள் திணைக்களத்தினர் அந்த இடத்தை அவர்களுக்குரிய இட மாக அடையாளப்படுத்தியுள்ள னர். அதே நேரத்தில் இன்று அரசாங்கத்துடன் இணைந் திருக்கும் நபர்கள், பாராளுமன் றத்தில் மட்டும் ஒரு ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் இதை கதைக்காமல், உண்மையி லேயே ஜனாதிபதியின் விசேட குழுவுக்கு இரண்டு தமிழர்களை யாவது உள்வாங்க வைக்கலாம்.

இதனைப்பற்றி அறிந்த தமிழர்களையாவது உள்வாங்க வைக்கலாம். அதனை விட்டு விட்டு அபிவிருத்தி என்ற பெய ரில் எங்கள் நில அபகரிப்பை அவர்கள் நிறுத்தவேண்டும்- என்றார்.

# வடக்கு உயர் அதிகாரிகள் பலர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

வடக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களை நவீன மயப்படுத்தல் தொடர்பிலான இரண்டு நாள் ஆய்வரங்கில் பங்குகொண்ட வடக்கு மாகா ணத்தின் அதி உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகள் தொடக்கம் பிரதேச சபைத் தவிசாளர்கள் வரை பெருமளவானவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட் படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

யு.என்.டி.பி. மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியில் உள்ளூராட்சி மன் றங்களை நவீனமயப்படுத்தல் தொடர்பிலான ஆய்வரங்கு யாழ்ப்பாணம், திருநெல்வேலி யில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கடந்த 23, 24ஆம் திகதிகளில் நடைபெற்றது.

குறித்த விடுதியிலேயே 2 நாட்கள் அதிகாரிகள் தங்கியி ருந்து ஆய்வரங்கில் பங்கு கொண் டதுடன் விருந்துபசாரங்களி லும் பங்கேற்றிருக்கின்றனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்ட யாழ்.மாநகர முதல்வர் வி.மணி வண்ணன் கடந்த 23ஆம் திகதி பிற்பகல் வரை குறித்த கூட்டத் தில் பங்குகொண்டதுடன் அங்கு பல்வேறு கலந்துரையா டல்கள் மற்றும் விருந்துபசாரத் திலும் பங்கேற்றிருந்தார்.

குறித்த ஆய்வரங்கில் வடக்கு மாகாண பிரதம செய லாளர், உள்ளூராட்சி மன்றங் களின் ஆணையாளர்கள், தவி சாளர்கள், யாழ்.மாநகர ஆணை யாளர் உட்பட்ட வடக்கின் உயர் அதிகாரிகள் வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த வடக்கு மாகாண நிர்வாக சேவைக்கு உட்பட்ட அதிகாரிகள் எனப் பலர் பங்கு கொண்டிருந்திருந்தனர்.

இந்நிலையில் பிரதேச பொதுச் சுகாதார உத்தியோகத் தர்களால் குறித்த ஆய்வரங்கில் பங்குகொண்டவர்களில் பலர் தனிமைப்படுத்தலில் இருக்கு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்பட்டது.

# தொல்பொருள் திணைக்களத்துடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சந்திப்பு

கொழும்பு, மார்ச் 26

எதிர்வரும் திங்கட்கிழமை தொல்பொருள் திணைக் கள அதிகாரிகளின் பங்குபற்றுதலு டன் இடம்பெற வுள்ள கலந்து ரையாடலில் பங்கேற்குமாறு, இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தொல்பொருள் அகழ்வுகள் தொடர்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதர னினால் நேற்று முன்தினம் பாராளுமன் றில் சபை ஒத்தி வைப்புவேளை பிரேரணை முன் வைக்கப்பட்டது.

இந்த விவாதத்தில் பதிலளித்து உரையாற்றிபோது அவர் இதனைக் குறிப்பிட்டார் குறித்த விவாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், தே. கலையரசன், இரா சாணக் கியன், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் கருத்து தெரிவித்தனர்.

இதையடுத்து, பதிலளித்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, தொல்பொருள் விடயப் பரப்பானது, எந்தவொரு சமயத் திற்கோ அல்லது மதத் திற்கோ அல்லது ஏதாவது ஒரு குழு விற்கு வரையறுக்கப் பட்ட ஒன்றல்ல எனக் குறிப்பிட்டார்.

தெற்கில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளாமல், ஏன் வடக்கில் மாத்திரம் அகழ்வுப் பணிகளை மேற் கொள்கின்றீர் கள் என பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

உலகில் இந்த நாட்டைப் போல, தொல்பொருள் சிறப்பு மிக்க வேறு ஒரு நாடு எங்கும் இல்லை. இது எம் அனைவரினுடைய உரிமையாகும்.

எதிர்வரும் திங்கட்கிழமை அமைச்சில் தொல் பொருள் திணைக்கள அதிகாரிகளின் பங்கேற்புடன் கலந்துரையா டல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதில் அனைவரும் பங்கேற்று தங்கள் பிரச்னைகளை முன் வைத்தால், எவ்வாறான முடிவை எடுக்கலாம் என்பதை ஆராயலாம் என இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் இந்தியாவின் நிலைப்பாடு சரியா?

ராமு மணிவண்ணன்
சென்னை பல்கலைக்கழகத்தின் அரசியல் அறிவியல் துறையின் தலைவர்



2009இல் நடந்த இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் நடந்த மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றம் தொடர்பாக விசாரணைகள் நடத்த வேண்டும் என கோரி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. 2012லும் 2015லும் இது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆனால், இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டிய அரசு சார்ந்த கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றவில்லை. ஆகவேதான் மனித உரிமைகள் ஆணையத்தில் அடுத்த நகர்வாக தற்போதைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இலங்கை அரசு நடத்திய இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை உலக நாடுகளின் பார்வைக்கும் மனித உரிமை மன்றத்தின் பார்வைக்கும் உட்பட்டது என்பதை தற்போதைய தீர்மானம் உறுதி செய்திருக்கிறது.

இம்மாதிரியான தீர்மானங்களால் என்ன பலன், என்ன செய்ய முடியும் என்று கேட்டால், இவை உலக அரங்கில் நடத்தப்படுகிற விவாதங்கள் என்பதைவிட, உலகின் எந்த மூலையிலும் நடத்தப்படுகிற அநீதிகளுக்கான எதிர்ப்புக் குரல் என்றுதான் சொல்ல வேண்டும். தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஏதோ ஒரு வகையில் நீதி தேட வேண்டும் என தமிழ் மக்கள் நினைக்கிறார்கள். உலக நாடுகள் இதற்கென ஒரு வரைமுறையை வைக்கிறார்கள். இலங்கையின் அரசியல், பிராந்திய அரசியல், உலக அரசியல் ஆகியவற்றுக்கெல்லாம் உட்பட்டு, இதனை எப்படிச் செய்ய முடியும் என்பதற்கான திட்டமாகத்தான் இந்த தீர்மானத்தை நாம் பார்க்க வேண்டும்.

2015ஆம் ஆண்டு தீர்மானம் வரும்போது, இந்திய அரசு அதற்கு ஆதரவாகத்தான் இருந்தது. அந்தத் தருணத்தில் இலங்கையில் ஆட்சி மாற்றம் நடந்திருந்தது. சிறிசேன புதிய அதிபராகப் பதவியேற்று இருந்தார். ஆகவே, அந்த ஆட்சி மாற்றத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற எண்ணம் பல நாடுகளுக்கு இருந்தது. அந்த ஆட்சி நல்லிணக்கத்திற்குப் பாலமாக அமையுமென மேற்கத்திய நாடுகள் எதிர்பார்த்தன. ஆனால், அது நடக்கவில்லை.

2015ஆம் ஆண்டின் அரசியல் சூழலை எடுத்துக்கொண்டால், இப்போதைய அரசியல் சூழல் மிக மோசமான சூழலில் இருக்கிறது. சிறுபான்மையினருக்கான அச்சுறுத்தல் என்பது அதிகரித்திருக்கிறது. தவிர, எதற்குமே பொறுப்பு ஏற்க மாட்டோம் என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு இருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் இந்த ஆண்டின் தீர்மானம் மிக முக்கியமானதாக இருக்கிறது.

ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு இந்தத் தீர்மானத்தின் மூலம் முழுமையான நீதி கிடைக்காது என்ற எண்ணம் இருக்கிறது. அது ஒரு வகையில் சரியான பார்வைதான். அவர்கள் ஒரு அரசியல் நீதியை எதிர்பார்க்கிறார்கள். ஆனால், மேற்கு நாடுகள் உட்பட மற்ற நாடுகள் இந்த விவகாரத்தை வேறு மாதிரி பார்க்கின்றன. அவர்கள், இந்தப் பிராந்தியத்தின் புவிசார் அரசியலையும் இலங்கை மீதான சீனாவின் தாக்கத்தையும் மையமாக வைத்து இந்த முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள்.

இந்தியாவை ஒரு நட்பு நாடு போல இலங்கை பாவனை செய்கிறது. ஆனால், இந்தியாவைக் கையாள்வதில் கடந்த 70 ஆண்டுகளாக ஒரு தீர்மானமான பார்வை இருக்கிறது. ஆனால், இந்தியாவுக்கு இலங்கை குறித்து அப்படியான தெளிவான பார்வை ஏதும் கிடையாது. 1971ல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் போர் வந்தபோது, இலங்கை பாகிஸ்தானை ஆதரித்தது. 1962ஆம் ஆண்டு இந்திய - சீன யுத்தத்தின்போதும் இலங்கை சீனாவை ஆதரித்தது. ஆகவே இலங்கை எப்போதுமே தெளிவாக இருந்திருக்கிறது.

இந்தியா புவியியல் ரீதியாக நெருக்கமாக இருந்தும்கூட, கடந்த பத்தாண்டுகளில் சீனாதான் மிகப் பெரிய அளவிலான முதலீடுகளை அங்கு செய்திருக்கிறது. துறைமுகங்கள், விமான நிலையங்கள், சாலைகள் போன்ற கட்டமைப்புகளிலும் பெரும் உதவிகளைச் செய்திருக்கிறது. இந்த முன்னெடுப்புகளின் மூலம் இந்தியாவுக்கும் சில அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. இப்போது இலங்கை, சீனா சொல்வதைச் செய்யும் நாடாக மாறி வருகிறது.

இந்தச் சூழலில், எதற்காக இந்தியா கடந்த 30 ஆண்டுகளாக 13வது அரசியலமைப்பு திருத்தத்தையே வலியுறுத்தி வருகிறது எனத் தெரியவில்லை. இந்தியா சொல்லி, இலங்கை அதனை ஏற்காத நிலையில், தற்போது உலக நாடுகளின் மூலம் இலங்கையை இந்த திருத்தத்தை ஏற்க வைக்க முயற்சிக்கிறது இந்தியா. இது நம்முடைய பலவீனத்தைத்தான் காட்டுகிறது.

இந்த நிலையிலிருந்து இந்தியா மீள வேண்டும். இலங்கை - பாகிஸ்தான் - சீனா என்ற புவிசார் அரசியலைப் புரிந்து கொண்டு ஒரு நிலைப்பாட்டை இந்தியா எடுக்க வேண்டும். இந்தியாவைப் பொறுத்தவரை கடந்த 60 ஆண்டுகளாக எவ்வவரள - நரழ மாறாமல், அதே இடத்தில் இருக்க வேண்டும் என நினைக்கிறார்கள். தாங்கள் எந்த இடத்தில் இருக்கிறோமோ, அந்த இடத்தைப் பாதுகாத்தால் போதுமென நினைக்கிறார்கள். உலகில் நடந்துவரும் எந்த மாற்றத்தையும் நாம் ஏற்கவோ, அதனூடாக பயணிக்கவோ விரும்பவில்லை என்பதுதான் இதற்கு அர்த்தம்.

திபெத், நேபாளம், இப்போது இலங்கை என இந்தியாவைச் சுற்றியிருக்கும் ஒவ்வொரு நாட்டிலும் இந்தியா இதேபோல்தான் செயல்படுகிறது. நம்மை மீறி எதுவும் நடந்துவிடாது என இந்தியாவின் அதிகாரவர்க்கம் கருதுகிறது. ஆனால், இந்தியாவின் சிந்தனைக்கும், அதன் அக்கறைகளுக்கும் எதிராகத்தான் எல்லாமே நடந்திருக்கிறது. இலங்கையிலும் இதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஆனால், இந்திய அரசாங்கம் இப்போதும் மெத்தனமாகத்தான் இயங்கிக்கொண்டிருக்கிறது.

க்யூபா, வெனிசுலா போன்ற நாடுகளும் இந்தத் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்திருக்கின்றனர். இப்படி இடதுசாரி அரசுகள் இருக்கும் நாடுகளைப் பொறுத்தவரை, அவர்கள் இந்த விவகாரத்தை அமெரிக்காவை வைத்து அணுகுகின்றன. அமெரிக்கா ஆதரிக்கும் தீர்மானத்தை எதிர்ப்பது என்பதுதான் இவர்களது பார்வையாக இருக்கிறது.

இலங்கை தொடர்ந்து பன்னாட்டு அரசுகளின் பார்வையில் இருக்கிறது என்பதுதான் இந்தத் தீர்மானம் சொல்லும் முக்கியமான செய்தி. சாட்சியங்களையும் ஆவணங்களையும் சேகரிக்க வேண்டுமென மனித உரிமை ஆணையத்தின் தலைவர் மிஷெல் போகெட் சொல்லியிருக்கிறார். அதற்கென மிகப் பெரிய தொகையும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போதும், இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை எந்த முன்னேற்றத்தையும் காண்பிக்கவில்லையென்றால் அடுத்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் இதனை குற்றவியல் நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லலாம்.

இது ஒரு நீண்ட காலப் போராட்டம். முதலில் பிராந்திய அளவில் நடந்தது. இப்போது சர்வதேச அளவில் நடக்கிறது. ஆனால், இதற்கான தீர்வு உடனடியாகக் கிடைக்குமா என்றால், அதற்குப் பதில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவும் இறைமையும்

**இலங்கை விடயத்தில் மனித உரிமைகள் பேரவையின் பிடி, பெரியளவில் இல்லாவிட்டாலும் சிறிதளவேனும் இறுகி வருவதையே காணக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையில், இறையாண்மை என்ற கவசம் தாங்குமா? என்பது கேள்விக்குறியே.....**




இலங்கை தொடர்பாக, பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளால் முன்வைக்கப்பட்ட பிரேரணையொன்று, நேற்று முன்தினம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. முன்னர் அது, நேற்று முன்தினம், அதாவது திங்கட்கிழமையே வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்பட இருந்தது.

"இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக, பேரவைக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த நாடுகளை விட, அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்த நாடுகளே அதிகம்" எனக் கூறிக்கொண்டு இருந்த இலங்கை அரச தலைவர்களும் அதிகாரிகளும், பின்னர் நிலைமை மாறிவிட்டதை ஒப்புக் கொண்டனர்.

அரச தலைவர்கள், இந்த விடயத்தில் நடந்து கொண்ட முறை, விந்தையானது என்றே கூற வேண்டும். ஒருபுறம், தாம் பிரேரணையை நிராகரிப்பதாகக் கூறிய அதேவேளை, மறுபுறம், அப்பிரேரணையைத் தோற்கடிக்கப் பேரவையின் உறுப்பு நாடுகளின் உதவியையும் நாடினர்.

ஒருபுறம், அவ்வாறு சில நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் உள்நாட்டில் சில விட்டுக் கொடுப்புகளை மேற்கொள்ளும் அரசாங்கம், அதேவேளை, அதே நாடுகளைச் சினம் கொள்ளச் செய்யும் நடவடிக்கைகளையும் எடுக்கின்றது.

உதாரணமாக, முஸ்லிம் நாடுகளின் உதவியை நாடிய அரசாங்கம், கொவிட்-19 நோயால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்ய அனுமதித்தது. அதேவேளை, சில முஸ்லிம் பெண்கள் அணியும் 'புர்க்கா' எனப்படும் முகத்திரையைத் தடை செய்யப் போவதாக அறிவித்தது. பின்னர், அவ்வாறானதொரு முடிவு இல்லை எனக் கூறியது.

இதேபோல், இந்திய அரசாங்கத்தின் உதவியையும் அரச தலைவர்கள் எதிர்பார்த்தார்கள். அத்தோடு, முறையான அதிகாரப் பரவலாக்கல் முறைமையொன்றை அமலாக்க வேண்டும் என, இந்தியா பல முறை இலங்கை அரசாங்கத்திடம் கூறியிருந்த நிலையில், மாகாண சபைகளை ஒழிக்கப் போவதாகத் தெரிவித்தனர். பின்னர், "இல்லை... இல்லை, விரைவில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தப் போகிறோம்" என்று கூறினர்.

இந்தப் பிரேரணை மட்டுமல்லாது, இதற்கு முன்னர் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளும், இலங்கையின் உள்நாட்டு அலுவல்களில் மேற்கொள்ளப்படும் தலையீடுகள் என்றும் அவை நாட்டின் இறைமையை மீறுவதாகவும் அரச தலைவர்கள் கூறுகின்றனர். அதனாலேயே தாம் அவற்றை நிராகரிப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால், அரச தலைவர்கள் நாட்டின் இறைமையைப் பாதுகாக்கிறார்களா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியுள்ளது. சுகாதாரத் துறையினரின் ஆலோசனைப் படியே, கொவிட்-19 நோயால் மரணித்தவர்களின் உடல்களைக் கட்டாயமாகத் தகனம் செய்ய வேண்டும் என்ற முடிவைத் தாம் எடுத்ததாக அவர்கள் கூறி வந்தனர்.

**-எம்.எஸ்.எம். ஐயூப்**

ஆனால், மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் ஆரம்பமாகி, அதில் உரையாற்றிய 57 உறுப்பு நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் (ஓஐசி) பொதுச் செயலாளர் யூசப் அல் ஒதைமீன், "இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கான இலங்கை முஸ்லிம்களின் உரிமை, வழங்கப்பட வேண்டும்" எனக் கூறிய போது, அந்த நெருக்குதலை ஏற்று, அரசாங்கம் அடக்கம் செய்வதை அனுமதித்தது.

இதேபோல், மனித உரிமைகள் பேரவையின் இந்தியப் பிரதிநிதி இந்திர மணி பாண்டே, "இலங்கையில் முறையான அதிகார பரவலாக்கல் முறை அமலாக்கப்பட வேண்டும்" எனத் தமது உரையில் கூறியதை அடுத்து, மேலே குறிப்பிடப்பட்டதைப் போல், இலங்கை அரசாங்கம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தப் போவதாக அறிவித்தது. உள்நாட்டு விடயங்களை, வெளிநாட்டவரின் நெருக்குதலுக்கு ஏற்ப செய்ய வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்குமாயின், இறைமை என்று இவர்கள் எதைக் குறிப்பிடுகிறார்கள்?

இலங்கையில் பல பொருளாதார திட்டங்களை, அரசாங்கம் சீனாவிடம் கையளித்துள்ளது. இந்த நிலையில், மேலும் சில திட்டங்களை இந்தியாவிடம் கையளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அரசாங்கம் உள்ளாகியுள்ளது. உண்மையிலேயே, இலங்கை இறைமை உள்ள நாடாக இருந்தால், நாம் விரும்பிய நாட்டுடன் சேர்ந்து, நமது பொருளாதாரத் திட்டங்களை அமல் செய்ய எம்மால் முடிந்திருக்க வேண்டும்.

அதன்நிமித்தம், மற்ற நாடுகள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்ற நிலையில் நாம் இருக்க வேண்டும். இந்தியாவோ சீனாவோ, பிரச்சினைகளை உருவாக்கிவிடுமே என்று பயந்து, அந்நாட்டுக்கும் நமது பொருளாதார திட்டங்களை வழங்க வேண்டிய நிலை ஏற்படுமேயானால் அது என்ன இறையான்மை?

2012ஆம் ஆண்டு, அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கை தொடர்பாக, முதலாவது பிரேரணையை முன்வைத்த போதும், "இறையான்மை பாதிக்கப்படுகிறது" என்று கூறி, அரசாங்கம் அதை நிராகரித்தது. ஆனால், அந்தப் பிரேரணையின்படி பேரவையின் அடுத்த கூட்டத்துக்கு இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பானதொரு வேலைத் திட்டத்தை முன்வைத்தது. இது இறையான்மைக்கு முரணானது இல்லையா?

கடந்த வருடம், அதற்கு முன்னைய மூன்று பிரேரணைகளுக்கு முன்னைய அரசாங்கம் வழங்கிய இணை அனுசரணையை அரசாங்கம் வாபஸ் பெற்றது. ஆனால் அந்தப் பிரேரணைகளின்படி, நிறுவப்பட்ட காணாமற்போனோருக்கான அலுவலகத்தையும் (ஓஎம்பி) மறுசீரமைப்பு (சுநியசயவழைெ) அலுவலகத்தையும் தொடர்ந்து நடத்துவதாகவும் அறிவித்தது. தாம் நாட்டின் இறைமையைப் பாதிக்கும் பிரேரணைகளாக வர்ணிக்கும் ஆவணங்களில் உள்ளவற்றை அரசாங்கம் நிறைவேற்ற முன்வருவதாக இருந்தால், அரச தலைவர்கள் இறைமை என்று எதைக் குறிப்பிடுகிறார்கள் என்ற கேள்வி எழுகிறது.

உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட வெளிநாடுகளுக்கோ, சர்வதேச அமைப்புகளுக்கோ உரிமை இல்லை என்பதே இப்போது அரசாங்கத்தில் நிலைப்பாடாக உள்ளது. இக்கருத்தை, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் அரச தலைவர்கள் கூறி வந்தனர். ஆயினும், அதே மஹிந்த 1989 ஆம் ஆண்டு என்ன செய்தார் என்பதை, மக்கள் மறந்துவிட்டார்கள் என அத் தலைவர்கள் நினைக்கிறார்கள் போலும்!

மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது கிளர்ச்சி நடைபெற்று வந்த அக்காலத்தில், நாட்டின் தென் பகுதிகளில் வீதியோரங்களிலும் ஆறுகளிலும் இளைஞர்களின் சடலங்கள் காணப்பட்டன. பல பகுதிகளில் புதைகுழிகளில் பல சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்போது காணாமற்போனோரின் எண்ணிக்கை 64 ஆயிரம் என, அப்போதைய பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கூறின.

அக்காலத்திலும், ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் கூட்டம் நடைபெறும் போது, இப்போது தமிழ் அமைப்புகள் செய்வதைப் போல் மஹிந்த ராஜபக்ஷவும் வாசுதேவ நாணயக்காரவும் காணாமற்போன ஆயிரக் கணக்கானவர்களின் விவரங்களைச் சேர்த்துக் கொண்டு, ஜெனிவாவுக்குச் சென்றார்கள். அப்போது, தமது செயல் வெளிநாட்டு தலையீட்டை வரவழைப்பதாக அமையும் என்று மஹிந்த நினைக்கவில்லைப் போலும். அல்லது, அப்போது நாட்டின் இறையான்மை என்று ஒன்று இருக்கவில்லையா?

இலங்கையில் மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அதிகாரிகள், அரசியல்வாதிகளுக்கு எதிராக மனித உரிமைகள் பேரவையின் ஏனைய உறுப்பு நாடுகளில் வழக்கு விசாரணை நடத்த வேண்டும் என்பதும், அதற்காக மனித உரிமைகள் பேரவை, சாட்சியங்களைத் திரட்ட வேண்டும் என்பதுமே இம் முறை மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்சலேயின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருந்தவற்றில் இலங்கைத் தலைவர்களை அச்சமூட்டும் கருத்துகளாகும். அத்தோடு அவ்வாறு மனித உரிமை மீறியோரின் வெளிநாடுகளில் உள்ள சொத்துகளைத் தடை செய்ய வேண்டும் என்பதும் அச்சமூட்டும் மற்றொரு கருத்தாகும்.

ஆனால், லிபியா, ஈராக், சூடான் போன்ற நாடுகளின் தலைவர்களுக்கு எதிராக எடுத்ததைப் போன்ற பாரதூரமான நடவடிக்கைகளை, இலங்கை தலைவர்களுக்கு எதிராக, ஐ.நா எடுக்கப் போவதில்லை என்பது தெளிவான விடயமாகும். எனினும், தனிப்பட்ட அரசியல்வாதிகள், அதிகாரிகள் குறிவைக்கப்படுவார்கள் என்றும் தெரிகிறது. அதற்கு உதாரணங்களும் உள்ளன. இலங்கை விடயத்திலும் மனித உரிமைகள் பேரவையின் பிடி, பெரியளவில் இல்லாவிட்டாலும் சிறிதளவேனும் இறுகி வருவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

இந்த நிலையில், இறையாண்மை என்ற கவசம் தாங்குமா என்பது கேள்விக்குறியே. எனவேதான், இந்தப் பிரச்சினை தொடர்ந்தும் இலங்கை தலைவர்களை விரட்டி வரும் என்றும் ஆகவே உள்நாட்டு பொறிமுறை யொன்றின் மூலம், மனித உரிமைகள் மீறல் தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய வேண்டும் என்றும் இறுதிப் போரின் போது இராணுவத் தளபதியாகவிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, கடந்த வாரம் தொலைக் காட்சி உரையாடல் ஒன்றின் போது கூறியிருந்தார் என்பதும், கருத்தூன்றி நோக்கப்பட வேண்டியதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

## ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி



**26**

**2012 - 16**

01F.உருக்களில் ஒற்றுமை வேற்றுமை காணல்.
ஆங்கில எழுத்துக்களான PE SN AH என்பன தரப்பட்டுள்ளது இதில் ஒரு உரு ஏனைய இரு உருக்களிலிருந்து வேறுபடுகின்றன.கண்ணாடியில் இவ்வுருக்களை அவதானிக்கும் போது AH ஆனது HA ஆகத் தென்படும். ஏனைய PE SN கண்ணாடியில் இவ்வுருக்களை அவதானிக்கும் போது வலம் இடம் மாறி வரும்போது எழுத்துக்கள் வாசிக்கப்பட முடியாதிருக்கும். அதற்குரிய சரியான **விடை 03**

**2013 - 05**

01F. உருக்களில் ஒற்றுமை வேற்றுமை காணல்.


தரப்பட்ட உருவம் ஒரு ஐங்கோணம்.  இதில்கறுப்பு தாரையைக் கவனியுங்கள்.இதனை வலப்புறமாக தொண்ணூறு பாகை வலப்புறம் இதில்கறுப்பு தாரையைக் கவனியுங்கள்.இதனை வலப்புறமாக தொண்ணூறு பாகை வலப்புறம்  என வரும். எனவே சரியான **விடை 03**

**2014 - 23**

**01E.** தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்தல். ஏதிர் எதிராக % அடையாளம் ஒன்றையொன்று குறுக்கிடும்போது பொருந்தக் கூடியது உரு 3 ஆகும்.





அதே சமயம் உரு 2 பொருந்தாது.காரணம் 4 வட்டங்களையும் கோடுகள் வெட்ட வேண்டும். உரு 1 இல் கோடுகள். சரிவாக குறுக்கிடவில்லை.





எனவே சரியான **விடை - 03**

**2014 - 24**

**01E.** தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்தல்.





முதலாவது உருவில் வட்டமும் இரண்டாவது உருவில் பெட்டியையும் ஒன்றிணைத்தால் குத்துமதிப்பாக பெரிய பெட்டி குறுகிய வட்டமும் எனவே சரியான விடை 02  எனவே வட்டத்தினுள்  சதுரம் பொருந்தாது.

மேலும் விடை 3 பொருந்தாது. 

**2015 - 16**

**01E.** தரப்பட்டுள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்தல்.




குறித்த உரு 1 தொடர்பாக.குறித்த உரு 2 தரப்பட்ட விவரணத்தை சரியாக விளக்குகிறது.45 பாகை சரிவாக உள்ளதைத் தவிர வேறெந்த வித்தியாசமும் இல்லை.உரு 3இல் உற்றுக் கவனியுங்கள் மேல் கால்வட்ட வெட்டுக்கோட்டின் முடிவில் மூன்று திருகுகளுக்குப் பதிலாக இரண்டு திருகுகளே உள்ளன. எனவே சரியான **விடை 03**

**2016 - 03**

**01F.** உருக்களில் ஒற்றுமை வேற்றுமை காணல்
இங்கே பறக்கும் பறவை ஒன்றின் உருக்கள் காட்டப்பட்டுள்ளது.இவற்றில்




இவ்விரண்டு உருக்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளுமில்லை. முக்கியமாக கழுத்திற்கு பின்னாடி ஒரு துண்டு இருப்பதைக் கவனியுங்கள்.இத துண்டு கீழே உள்ள உருவில் கிடையாது.




இவ்விரண்டு உருக்களுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுகளுமில்லை.முக்கியமாக கழுத்திற்கு பின்னாடி ஒரு துண்டு இருப்பதைக் கவனியுங்கள்.இத துண்டு கீழே உள்ள உருவில் கிடையாது.

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# யானை - மனித மோதலை கட்டுப்படுத்த நவீன திட்டம்

கொழும்பு, மார்ச் 26

கிராமப் புறங்களில் பாரிய பிரச்னையாக விளங்கும் யானை - மனித மோதலைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான நவீன செயல்திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என வன ஜீவ ராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

இராஜகிரியவில் அமைந்துள்ள வன ஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யானை மற்றும் காட்டில் வாழும் உயிரினங்கள் தங்களுக்கான உணவுகளைக் காடுகளிலேயே பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

காட்டு எல்லைக்கு அப்பால், மனிதர்கள் வசிக்கும் இருப்பிடங்களுக்குப் போக முடியாதவாறு மின்சார வேலிகளை அமைத்தால். அதாவது இந்த வேலிகள் முன்னர் இருந்ததை விடவும் வினைத்திறன் மிக்கவை. அதி நவீன உபகரணங்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளன. இந்த மின்சார வேலிகள் உயர் மின் அழுத்தம் கொண்டதுடன், 7 அடி உயரமிக்கவை.

இந்த வேலைத்திட்டதை எதிர்வரும் மே மாதத்தின் ஆரம்பத்தில் அல்லது நடுப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளோம். இதன் முதற்கட்டமாக 1000 கிலோ மீற்றர் வரையான மின்சார வேலிகளை அமைக்கத் தீர்மானித்துள்ளோம்.

எமது பணிகளுக்குப் போதுமான ஆளணி பலம் இன்மையால், முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு அமைப்பு எமக்கு உதவி செய்ய முன்வந்துள்ளன. இதன்படி வவுனியா மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புப் படையும், அம்பாறை மாவட்டத்தில் இலங்கைக் கடற்படையும், அநுராதபுரம் மாவட்டத்தில் இலங்கை இராணுவப்படையும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இலங்கை விமானப் படையும் வேலைகளில் ஈடுபடவுள்ளன.

மின்சார வேலிகளை அமைக்கும் இந்த வேலைத்திட்டதில் ஒவ்வொரு 10 கிலோ மீற்றருக்கும் காவல் அரண்கள் அமைத்து, அதில் இருவரை எந்நேரமும் காவலில் ஈடுபடுத்தவுள்ளோம். இவ்வாறு செயல்படுத்துவதால் யானை - மனித மோதல்களைக் குறைத்துக் கொள்ள முடியும் என நம்புகிறேன்.

இதற்காகப் பயன்படுத்தப்படும் உயர் ரக பொருள்களிலிருந்து சாதாரண ஆணி வரையான சகல பொருள்களும் உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களிடமிருந்தே பெற்று கொள்ளப்படும்- என்றார்.

இந்த வேலைத்திட்டத்தில் வன ஜீவ ராசி மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புபட்ட திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் எனப் பலவும் ஒன்றிணைந்து செயல்படவுள்ளன. (எ)

# இந்த வருடம் இதுவரை 83 யானைகள் மரணம்!

கொழும்பு, மார்ச் 26

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 83 காட்டு யானைகள் உயிரிழந்தன என்று வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பத்திரண தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்த யானைகளில் 47 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டவை. அதாவது, உள்நாட்டு வெடி மருந்தால் (அக்க பட்டஸ்) சுடப்பட்டு, விஷம் கொடுத்து, மின்சாரத்தை பாய்ச்சி யானைகள் கொல்லப்பட்டுள்ளன. ஏனையவை நோய்வாய்ப்பட்டு, இயற்கையாகவே உயிரிழந்தவை என அவர் குறிப்பிட்டார். (எ)

# நாடு முழுவதும் ஒரே நாளில் மாத்திரம் 122 போதைப்பொருள் தடுப்பு சோதனை

கொழும்பு, மார்ச் 26

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவு ஆகியவற்றால் நேற்று முன்தினம் நாடு முழுவதும் 122 போதைப்பொருள் தடுப்புச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, வெல்லம்பிட்டி பகுதியில் 29 கிராம் ஐஸ் போதைப்பொருடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணமும் மீட்கப்பட்டது.

கொழும்பு கிராண்ட்பாஸ் பகுதியில் 15 கிராம் ஹெரோயினுடன் மேலும் ஒருவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். (எ)

# மனைவி கொலை! கணவன் தற்கொலை!! எரிந்த நிலையில் இருவரின் சடங்கள் மீட்பு

கம்பளை, மார்ச் 26

கம்பளை - அங்குருமுல்ல பகுதியில் மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்த கணவன் தற்கொலை செய்தார்.

குறித்த பகுதியிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் புதன்கிழமை தீக்கிரையாகி உயிரிழந்த நிலையில் இருவரின் சடலங்கள் காணப்படுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அங்குருமுல்ல - வத்தஹேன பகுதியைச் சேர்ந்த 57 வயது பெண்ணொருவரும், 68 வயதுடைய அவரது கணவனுமே இவ்வாறு உயிரிழந்தனர்.

தம்பதியினரான இவர்கள் நீண்ட நாள்களாக பிரிந்து வாழ்ந்து வந்த நிலையில், இவர்களுக்கு எதிராக கம்பளை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையொன்றும் இடம்பெற்று வருவதாகவும் விசாரணைகளின் போது தெரியவந்தது. இந்நிலையிலேயே குறித்த நபர் அவரது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்து பின்னர் சடலத்தை தீயிட்டு எரித்ததுடன், தானும் அதே தீயில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்தது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீது சர்வதேசத்தின் அழுத்தம் மேலும் அதிகரிக்கும்

## ஜெனிவா தீர்மானம் குறித்து ஐ.ம.ச. அறிக்கை

கொழும்பு, மார்ச் 26

**ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அவற்றுக்கு மதிப்பளிப்பதிலும் அரசாங்கம் தோல்வியடைந்தமையின் நேரடி விளைவாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட பிரேரணையைக் கருதமுடியும். கடந்த காலத்தில் இலங்கையை ஆதரித்த நாடுகள் கூட தற்போது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமைக்கு, மனித உரிமைகளைக் கேள்விக்குள்ளாக்கும் வகையிலான அரசாங்கத்தின் செயல்பாடுகளே பிரதான காரணமாகும். இத்தகைய செயல்பாடுகள் இலங்கையின் மீது சர்வதேசத்தின் அழுத்தம் மேலும் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும் என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.**

இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் வகையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானம் தொடர்பில் நாம் அவதானம் செலுத்தியிருக்கிறோம். நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தலும் மேம்படுத்தலும் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதை நாம் ஆதரிக்கின்றோம்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் மூன்று தசாப்தகாலப்போர் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டமை நாட்டின் வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாக அமைந்தது. நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பெருமளவானோர் அவர்களது உயிர்களைத் தியாகம் செய்தனர். இந்நிலையில் நாட்டின் ஒற்றுமை, இறையாண்மை, சுயாதீனத்துவம், அரசியல் சுதந்திரம் மற்றும் ஒருமித்த நாட்டிற்குள் உயர் அதிகாரப்பரவலை வழங்கும் வகையில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதிலும் நாம் அக்கறை கொண்டிருக்கிறோம். எனினும் போரினால் ஏற்பட்ட பாதிப்புக்களைச் சரிசெய்வதன் ஊடாக நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கு இடையிலும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் ஊடாகவே நிறைபேறான சமாதானத்தை அடைந்து கொள்ள முடியும்.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கத்தின் தோல்விகளின் நேரடி விளைவாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் கருதமுடியும். குறிப்பாக வெளிவிவகாரக் கொள்கைகளில் அரசாங்கத்தின் தோல்வியையும் நாட்டில் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஏற்பட்டுள்ள தோல்வியையும் அது வெளிப்படுத்துகின்றது. பகுத்தறிவற்ற முறையிலேயே தற்போதைய அரசாங்கம் வெளிவிவகாரக் கொள்கையை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் விஷேட அவதானம் செலுத்தி, சர்வதேச சமூகத்தைத் இராஜதந்திர ரீதியில் திருப்திப்படுத்தக்கூடிய விதத்தில் செயல்திறன்மிக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக அரசாங்கம் முறையற்ற பிரசாரங்களையே மேற்கொண்டு வந்திருக்கிறது. மிகவும் நம்பகத்தன்மை வாய்ந்த முறையில் சர்வதேச சமூகத்தைக் கையாளும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் சரிவரச் செயற்படவில்லை.

இந்த மந்தகரமான நடவடிக்கைகள் கடந்த காலத்தில் இலங்கையை ஆதரித்த நாடுகள் கூட தற்போது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளமைக்குப் பிரதான காரணமாகும். இந்நிலையில் வெளிவிவகாரக் கொள்கைகளைக் கையாள்வதற்கு இலங்கை புதியதும் சரியானதுமான முறையொன்றைப் பின்பற்ற வேண்டிய அவசியம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# ஐ.நாவில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு நாட்டின் தோல்வி!

## நளின் பண்டார சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 26

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இடம்பெற்ற வாக்கெடுப்பு நாட்டின் தோல்வியை எடுத்துக்காட்டுகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்படும் போது, ஒரு குறிப்பிட்ட தரப்பு வாக்களிப்பதைத் தவிர்ப்பது, அவர்கள் ஆதரவாகவோ அல்லது விடயத்துக்கு எதிராக வாக்களிப்பதாகவோ கருதப்படுவதில்லை.

இந்தியா போன்ற ஒரு நாடும் ஜப்பான், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளும் ஆதரவாக வாக்களிக்கவில்லை என்பதும் அவர்கள் படிப்படியாக இலங்கையை எதிர்க்கின்றனர் என்பதை காட்டுவதாகவும் நளின் குறிப்பிட்டார். (எ)



# வன அழிப்புத் தீவிரவாதிகளை நாம் நிச்சயம் தோற்கடிப்போம்

## சஜித் பிரேமதாஸ சூளுரை

கொழும்பு, மார்ச் 26

விடுதலைப்புலிகள் அமைப்பைப் போன்று, வனங்களை அழிக்கும் தீவிரவாதிகளையும் நாம் நிச்சயம் தோல்வியடையச் செய்வோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

காடழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவாசிப்பதற்கு இடமளியுங்கள் என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று கொழும்பு 7 இல் உள்ள விஹாரமகாதேவி பூங்கா வளாகத்தில் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தில் மக்களுடன் இணைந்து ஈடுபட்டுள்ளமை பெருமையளிக்கின்றது.

இந்தப் போராட்டத்தில் எவ்வித பேதமும் இன்றி மக்கள் எம்முடன் இணைந்துள்ளனர். இவ்வாறு எவ்வித பேதமுமின்றி நாமனைவரும் ஒன்றிணைந்து இயற்கையைப் பாதுகாப்பதற்கு அழைப்பு விடுக்கின்றோம். இந்த ஆர்ப்பாட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்போம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பைப் போன்று, வனங்களை அழிக்கும் தீவிரவாதிகளையும் தோல்வியடைச் செய்வோம். ஆனைவிழுந்தான், ஹோட்டன் சமவெளி, சிங்கராஜ வனம், வில்பத்து, நக்கிள்ஸ் மலை என அனைத்தும் இன்று அபாயத்திலுள்ளன.

இவை அனைத்தையும் பாதுகாப்பதற்கு நாம் முன்னின்றுச் செயல்படுவோம். இதுபோன்ற அமைதியான போராட்டங்களை நாம் நாடு முழுவதும் முன்னெடுப்போம்- என்றார். (எ)

# ஜனாதிபதி கோட்டாபய ஒருபோதும் ஊடகங்களை அச்சுறுத்தவில்லை!

## அமைச்சர் கெஹலிய விளக்கம்

கொழும்பு, மார்ச் 26

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஊடகங்களுக்கு ஒருபோதும் அச்சுறுத்தல் விடுக்கவில்லை. ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களின் செயல்பாடுகள் தொடர்பிலேயே தனது நிலைப்பாட்டை வெளியிட்டிருந்தார் என்று அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களின் செயல்பாடுகள் தொடர்பிலேயே அண்மையில் ஜனாதிபதி கருத்துக்களைத் தெரிவித்திருந்தார்.

இதனை ஊடகவியலாளர்களுக்கோ அல்லது அதனுடன் தொடர்புடையவர்களுக்கோ அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக கருத முடியாது.

ஜனாதிபதியால் கூறப்பட்ட கருத்துக்கள் திரிபுபடுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றன. எனவே, இதுதொடர்பில் ஊடகவியலாளர்கள் வீணாகக் குழப்பமடையத் தேவையில்லை.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக களுவேவா தனிப்பட்ட காரணத்துக்காகவே பதவி விலகியுள்ளார்.

தொழிற்துறையில் அடுத்த கட்ட நகர்வுகளை நோக்கிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு கிடைக்கப் பெறும் போது அதற்கு நாம் இடமளித்துள்ளோம்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைத் திரிபு வைரஸ் இந்தியாவில் கண்டறிவு!

புதுடில்லி, மார்ச். 26

**மாறுபாடடைந்த இரண்டு வைரஸ்கள் இந்தியாவில் 'கூட்டணி' அமைத்துள்ளன. உலகெங்கும் கொரோனா வைரஸின் மாறுபாடடைந்த திரிபுகள் தோன்றிப் பரவி வருவது தெரிந்ததே. ஆனால், முதன்முறையாக வைரஸின் "இரட்டைத் திரிபு" ஒன்றை** (double mutant variant) **இந்திய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.**

மேற்கு மாநிலமான மகாராஷ்டிராவில் 206 தொற்று மாதிரிகளில் இரட்டைத் திரிபடைந்த வைரஸ் கிருமி கண்டறியப்பட்டிருப்பதை அரசாங்க அதிகாரி ஒருவர் புதன்கிழமை உறுதிப்படுத்தி உள்ளார். தலைநகர் புதுடில்லியிலும் ஒன்பது பேரின் தொற்று மாதிரிகளில் இரட்டைத் திரிபு அறியவந்துள்ளது என்ற தகவலை தேசிய நோய்க்கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குநர் சுஜீத் குமார சிங் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்துள்ளார்.

"இரட்டைத் திரிபு என்பது அறிவியல் ரீதியான பெயர் அல்ல. ஏற்கனவே பரவி வருகின்ற இரண்டு திரிபுகளின் குணவியல்புகள் இந்தப் புதிய இரட்டைத் திரிபு வைரஸில் கண்டறியப்பட்டிருக்கிறது. அவற்றின் இரட்டைக் குணவியல்பு காரணமாக அவற்றுக்கு இரட்டைத் திரிபு என்று பெயரிடப்பட்டிருக்கிறது." - இவ்வாறு தொற்று நோயியல் நிபுணர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

இரட்டைத் திரிபு ஆபத்தானதா என்பதை உடனடியாக உறுதிப்படுத்திக் கூற முடியாது எனத் தெரிவித்திருக்கும் நிபுணர்கள், அது வேகமாகப் பரவும் தன்மை கொண்டுள்ளதா, தடுப்பூசி மருந்தை எதிர்க்கும் திறன் உடையதா என்பது பற்றியெல்லாம் மேலும் ஆய்வுகள் நடக்கின்றன என்று கூறியுள்ளனர். இந்த இரட்டைத் திரிபு வைரஸில் இருபது வீதமான தொற்றுக்கள் மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள முக்கிய வர்த்தக மையமாகிய நாக்பூர் நகரில் கண்டறியப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டில்லி உட்பட இந்தியாவின் பல மாநிலங்களிலும் வைரஸ் தொற்று பரவல் கடந்த சில நாட்களாக வேகமடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)



## ஐஸ்லாந்தில் எரிமலை வெடித்து ஆறாக பாயும் நெருப்பு குழம்பு!

ரேக்யவிக், மார்ச் 26

ஐஸ்லாந்து தலைநகர் ரேக்யவிக் அருகே உள்ள எரிமலை வெடித்து சிதறி நெருப்பு குழம்பு ஆறாகப் பாய்கிறது.

ஐஸ்லாந்து தலைநகர் ரேக்யவிக் அருகே உள்ள பாக்ரடல்ஸ்ஃபிஜால் (Fagradalsfjall) எரிமலை 800 ஆண்டுகளுக்குப் பிறகு சீற்றம் கொண்டு நெருப்புக் குழம்பைக் கக்கி வருகிறது. கிறீன்விச் நேரப்படி கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.45-க்கு இந்த எரிமலை வெடித்தது.

ரேக்யவிக் தீபகற்பத்தில் இந்த எரிமலையின் நெருப்பு குழம்பை அந்த நாட்டை சேர்ந்த ஆய்வாளர்கள், புகைப்பட கலைஞர்கள் பலர் சிறிய ரக ஆளில்லா விமானங்கள் மூலம் பதிவு செய்து வெளியிட்டுள்ளார்

இது தொடர்பான காணொலி, புகைப்படங்கள் இணையம், சமூகவலைத்தளங்களில் பிரபலமாகி வருகின்றது. (ஐ)



## செவ்வாய் கிரகத்தில் பறக்க தயாராகின்றது ஹெலிகொப்டர்

நியூயோர்க், மார்ச் 26

செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனம் ரோவர் விண்கலத்தை ஏவியது. அந்த ரோவர் கடந்த மாதம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது.

இந்த ரோவருடன் சிறிய ரக ஹெலிகொப்டரும் தரையிறங்கியது. இன்ஜெனூட்டி என்று பெயரிடப்பட்ட இந்த ஹெலிகொப்டர் வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி பறக்க விடப்படவுள்ளது. இதனை நாஸாவின் அறிவியல் இயக்குநர் பாபி பிரவுன் தெரிவித்தார்.

விமானத்தை கண்டுபிடித்த ரைட் சகோதரர்களின் முதல் விமானத்தின் ஒரு பகுதியை இன்ஜெனூட்டி ஹெலிகாப்டரில் இணைத்து உள்ளனர். ரைட் சகோதரர்களின் சொந்த ஊரான ஓகியோவின் டேட்டாலில் உள்ள வரலாற்று பூங்காவில் இருந்து அவர்களது முதல் விமானத்தின் கீழ் இருந்து சிறிய அளவிலான மெல்லிய துணியை நாஸாவின் வேண்டுகோளை ஏற்று நன்கொடை அளிக்கப்பட்டது. அதனை செவ்வாய் கிரகத் தில் பறக்க உள்ள ஹெலிகாப்டரில் பொருத்தி உள்ளனர். (ஐ)

# கண்டம் கடக்கும் ஏவுகணையை பரிசோதித்தது வட கொரியா!

பியொங்யாங், மார்ச் 26

ஐ.நா.வின் தீர்மானத்தை மீறி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி வட கொரியா பரிசோதித்துள்ளது. வடகொரியாவின் இந்த ஏவுகணைகள் தமது கடற் பிராந்தியம் அருகே விழுந்தன என்று ஜப்பான் தெரிவித்துள்ளது. அமெரிக்காவும் இதனை உறுதி செய்துள்ளது.

வட கொரியாவின் இந்த ஏவுகணை சோதனைக்கு தென் கொரியா, ஜப்பான் நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களின் கீழ் இவ்வாறான கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையிலேயே 450 கிலோ மீற்றர் தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை வடகொரியா பரிசீலித்துள்ளது. வட கொரியாவின் இந்த நடவடிக்கை ஜப்பான், அதைச் சுற்றியுள்ள நாடுகளின் அமைதிக்கு அச்சுறுத்தலாக அமைவதாக ஜப்பான் பிரதமர் யோஷிஹிடே சுகா தெரிவித்துள்ளார். அத்துடன், ஐ.நாவின் தீர்மானத்தை வடகொரியா மீறியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



ஜப்பானில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகவுள்ள நிலையில், வட கொரியாவின் இந்த நடவடிக்கை அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. எனினும், ஒலிம்பிக் போட்டிகள் பாதுகாப்பாக இடம்பெறும் என பிரதமர் யோஷிஹிடே சுகா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இரு நாட்களுக்கு முன்னர், வட கொரியா குறுகிய தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகளை பரிசோதித்திருந்தது. இதன்போது, கருத்து வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அமெரிக்காவை ஆத்திரமூட்டும் செயலாக இதைக் கருதவில்லை. குறுந்தூர ஏவுகணை சோதனைகளுக்கு ஐ.நா. தடை விதிக்கவில்லை என்றும் கூறியிருந்தார். இந்நிலையில், வடகொரியாவின் செயல் அமெரிக்காவை சீண்டும் முயற்சியே என்று அரசியல் வல்லுநர்கள் கருத்துக் கூறுகின்றனர். (ஐ)



# இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தல்! நெதன்யாகுவின் கட்சி வெற்றி!!

ஜெருசலேம்,மார்ச் 26

இஸ்ரேல் பாராளுமன்ற தேர்தலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தலைமையிலான கட்சி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது. எனினும் ஆட்சி அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மையை அந்தக் கட்சி பெறவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த இந்தத் தேர்தல் 4ஆவது தேர்தலாகும். கொரோனா அச்சம் காரணமாக குறைவான வாக்குகளே பதிவாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மொத்தம் 87.5 சதவீத வாக்குகள் பதிவாகின.

இதில், பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் லிக்குட் கட்சி தலைமையிலான கூட்டணி 59 இடங் களை கைப்பற்றி வெற்றி பெற்றது. எனினும் ஆட்சி அமைப்பதற்கு 61 இடங்கள் தேவை என்கிற நிலையில் அந்த கூட்டணிக்கு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதே போல் பெஞ்சமின் நெதன்யாகுவுக்கு எதிரான கூட்டணி 56 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அவர்களுக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் ஆட்சி அமைப்பது யார் என்கிற கேள்வி எழுந்துள்ளது.

இதேசமயம் 5 இடங்களில் வெற்றி பெற்றுள்ள ராம் என்று அழைக்கப்படும் சிறிய அரபு கட்சி புதிய அரசை முடிவு செய்யும் கட்சியாக உருவெடுத்துள்ளது.அந்தக் கட்சியின் தலைவர் மன்சூர் அப்பாஸ் தனது ஆதரவு யாருக்கு என்று இன்னும் அறிவிக்கவில்லை. ஒருவேளை அவர் எந்தக் கூட்டணிக்கும் ஆதரவு தெரிவிக்காவிட்டால் இஸ்ரேல் 5-வது பொதுத்தேர்தலை சந்திக்க நேரிடும்.

(ஐ)

## பாரிஸின் உதைபந்தாட்ட அரங்கில் பெருமெடுப்பில் தடுப்பூசி முகாம்!

பாரிஸ், மார்ச் 26

ஸ்ரேட் டி பிரான்ஸ் என அழைக்கப்படும் பிரான்ஸின் தேசிய விளையாட்டு அரங்கு பாரிஸின் புறநகரான சீன் சென். டெனிஸில் அமைந்துள்ளது. தமிழர்கள் உட்பட வெளிநாட்டவர்கள் நெருக்கமாக வசிக்கும் இந்த மாவட்டம் வைரஸ் தொற்றினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதியாக உள்ளது.

இந்த மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றுகின்ற பணியை வேகமாக முன்னெடுப்பதற் கான ஒரு திட்டமாக அங்கு தேசிய விளையாட்டு அரங்கில் பெரும் தடுப்பூசி முகாம் ஒன்றை நிறுவ நகரசபை ஆலோசித்துள்ளது. நீண்ட காலம் மூடிக்கிடக்கும் ஸ்ரேட் டி பிரான்ஸ் அரங்கை ஏப்ரல் மாதம் திறப்பதற்கு உத்தேசித்துள்ளது.

நாளொன்றுக்கு பத்தாயிரம் பேருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்காக அரங்கில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கான அறைகளில் மருத்துவ வசதிகள் செய்யப்படவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக் தீபம் தொடர் ஓட்டம் ஜப்பானில் நேற்று தொடக்கம்!

ரோக்கியோ, மார்ச் 26

ஒலிம்பிக் தீபத்தின் தொடர் ஓட்ட நிகழ்வு ஜப்பானின் புகுஷிமாவில் ஜே வில்லேஜ் விளையாட்டு வளாகத்தில் நேற்று ஆரம்பமானது.

கொரோனா அச்சுறுத்தலால் ஓராண்டுக்கு பிற்போடப்பட்ட 2020 ரோக்கியோ ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 23 முதல் ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இதையொட்டியே ஒலிம்பிக் தீபத்தின் தொடர் ஓட்ட நிகழ்வு நேற்று ஆரம்பமானது. 2011ஆம் ஆண்டு பெண்கள் உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் ஜப்பான் அணி மகுடம் சூடிய போது, அந்த அணிக்கு பயிற்சி அளித்த நோரியோ சசாகி முதல் நபராக ரோஜா-தங்கம், செர்ரி மலரின் வடிவத்திலான ஒலிம்பிக் தீபத்தை எரியச் செய்தார்.

இது 2011 அணுசக்தி பேரழிவிற்கு பதிலளிக்கும் நடவடிக்கைகளுக்கான தளமாக அமைந்தது. இந் நிகழ்வில் உரையாற்றிய 2020 ரோக்கியோ ஒலிம்பிக் தலைவர் சீகோ ஹஷிமோடோ, ஒலிம்பிக் சுடர் "இருளின் முடிவில் ஒளியின் கதிராக" செயல்படும் என்று




நம்புகிறேன் எனக் கூறினார். அத்துடன் ஒலிம்பிக் சுடரின் பயணத்தின் ஆரம்பம் நம்பிக்கையின் அடையாளம் என்று கூறினார்.

ஜப்பான் முழுவதும் 47 மாகாணங்களுக்கு மொத்தம் 121 நாட்கள் இந்தத் தீபம் பயணிக்கிறது. இதை 10 ஆயிரம் பேர் தொடர் ஓட்டமாக எடுத்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கமாக தீப ஓட்டம் பலத்த ஆரவாரத்துடன் வெகுவிமரிசையாக நடைபெறும். ஆனால், கொரோனா பரவல் இன்னும் கட்டுக்குள் வராததால் குறைந்த எண்ணிக்கையிலான மக்கள் மட்டுமே தொடர் ஓட்ட நிகழ்ச்சியை பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள். அதுவும் சமூக இடைவெளி, கட்டாயம் முககவசம் அணிவது உள்ளிட்ட பல்வேறு கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. (ஐ)



## நிஷங்க கன்னி சதம்: இலங்கை எழுச்சி!!

பதும் நிஷங்க டெஸ்ட் போட்டியில் கன்னிச் சதம் அடித்து அசத்த, 375 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது இலங்கை அணி.

மேற்கிந்தியா சென்றுள்ள இலங்கை அணி தற்போது முதலாவது டெஸ்ட் போட்டியில் விளையாடி வருகின்றது. முதல் இனிங்ஸில் 169 ஓட்டங்களுடன் சுருண்டது இலங்கை. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 271 ஓட்டங்களைப் பெற்றது.

இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி மூன்றாம் நாள் ஆட்டம் முடிவில், 255 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்திருந்தது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் நான்காம் நாளில் தொடர்ந்தும் இலங்கை துடுப்பெடுத்தாடியது.

களத்தில் இருந்த தனஞ்சய டி சில்வா (46 ஓட்டங்கள் - பதும் நிஷங்க (21) களமிறங்கி ஆட்டத்தைத் தொடர்ந்தனர். தனஞ்சய அரைச்சதத்தைப் பூர்த்தி செய்த கையோடு ஆட்டமிழந்து சென்றார். அடுத்துவந்த நிரோஷன் டிக்வெல்ல நிஷங்கவுடன் இணைந்து அற்புதமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினார்.

இந்த இணையை ஆட்டமிழக்கச் செய்யும் வழி தெரியாமல் மேற்கிந்தியத் தீவுகளின் பந்துவீச்சாளர்கள் திணறினர். இருவரும் அரைச்சதத்தை பூர்த்தி செய்து தொடர்ந்து ஆடினர்.

இருவரும் இணைந்து ஆறாவது விக்கெட்டுக்காக 179 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தனர். இதனால் இரண்டாவது இனிங்ஸில் 400 ஓட்டங்களை கடந்தது.

252 பந்துகளை சந்தித்த நிஷங்க தனது கன்னி சதத்தைப் பூர்த்தி செய்தார். அவரைத் தொடர்ந்து அபாரமாக ஆடிய நிரோஷன் 163 பந்துகளில் 96 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். அவர் 4 ஓட்டங்களால் சதத்தை தவறவிட்டு வெளியேறினார்.

இறுதியில் சகல விக்கெட்களையும் இழந்த இலங்கை 476 ஓட்டங்களைக் குவித்தது.

மேற்கிந்தியத் தீவுகளின் பந்து வீச்சில் கெமர் ரோச், கோர்ன்வோல் தலா 3 விக்கெட்களையும், செய்ல் மேயர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது மேற்கிந்தியத் தீவுகள்.

ஆரம்பத்திலேயே, ஜோன் கேம்பெல்லை வீழ்த்தி விஸ்வ பெர்னாண்டோ அசத்தினார். கேம்பெல் 11 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். எனினும், 20 ஓவர்கள் நிறைவில் மேற்கிந்தியத் தீவுகள் 34 ஓட்டங்களை எடுத்து ஒரு விக்கெட்டையே வீழ்த்தியுள்ளது.

அணித் தலைவர் பிராத் வெயிட் 8, பொன்னர் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

## ஒலிம்பிக் வீராங்கனை பனிச்சரிவில் சிக்கி பலி

நியூயோர்க், மார்ச் 26

பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்த பிரான்ஸ் நாட்டின் வீராங்கனை ஜூலி பொமகல்ஸ்கி 40ஆவது வயதில் பனிச்சரிவில் சிக்குண்டு உயிரிழந்தார்.

இவர், கடந்த 2002 மற்றும் 2006 குளிர்கால ஒலிம்பிக்கில் தனது நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தார்.

த நியூயோர்க் ரைம்ஸ் கருத்துப்படி, சுவிஸின் அல்ப்ஸில் உள்ள ஜெம்ஸ்டாக் மலையில் போமகால்ஸ்கி நான்கு பேர் கொண்ட குழுவுடன் பனிச்சறுக்கு விளையாடிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்குண்டு உயிரழந்தார் என்று கூறப்படுகிறது.

இந்த பனிச்சரிவில் புருனோ குடெல்லி என்ற வழிகாட்டியும் உயிரிழந்தார். மற்றொரு நபர் பனிச் சரிவில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ஐ)




## ரிச்சர்ட்ஸ் - பொத்தம் கிண்ணம்: மே.இ. தீவு - இங்கிலாந்து மோதல்

லண்டன், மார்ச் 26

2022 ஆம் ஆண்டில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஐந்து இருபது -20 மற்றும் மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

இதனை இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் உறுதிப்படுத்தின. ஆரம்பத்தில் இந்த சுற்றுப் பயணத்தில் மூன்று இருபது -20 மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட திட்டமிட்டிருந்தனர். எனினும், தற்சமயம் போட்டி எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "ரிச்சர்ட்ஸ் - பொத்தம் போட்டியை" இலக்காகக் கொண்டு போட்டியிடும். மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சிறந்த கிரிக்கெட் வீரர் சேர் விவியன் ரிச்சர்ட்ஸ் மற்றும் இங்கிலாந்து வீரர் ஐகான் சேர் இயன் பொத்தம் ஆகியோரை கௌரவிக்கும் வகையில் இந்த போட்டியை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த தொடர் 2022 ஒக்ரோபரில் அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஐ.சி.சி. இருபது-20 உலகக் கிண்ண தொடருக்கான முன்னோடி போட்டியாகவும் இரு அணிகளுக்கும் அமையும்.

# உலகக்கிண்ணத்துக்கு முன்னர் இந்தியா - பாகிஸ்தான் மோதல்?



புதுடில்லி, மார்ச் 26

இங்கிலாந்தில் இந்திய அணி டெஸ்ட் தொடரில் விளையாடி முடித்த பிறகு, இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு முன்பு, பாகிஸ்தானுக்கு எதிரான இருபது - 20 தொடரில் விளையாடவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தான் ஊடகங்கள் இதுபற்றிய செய்தியை வெளியிட்டுள்ளன. இதனை இந்திய மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைகள் உறுதி செய்யவில்லை. ஆனால், கிரிக்கெட் ரசிகர்களிடையே இந்தச் செய்தி ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னாள் பாகிஸ்தான் வீரர் சஹிட் அப்ரிடி கூறுகையில், "இந்தியா - பாகிஸ்தான் இடையிலான கிரிக்கெட் தொடர் மிகவும் முக்கியமானது.

அரசியலுடன் விளையாட்டை இணைக்கக்கூடாது. கிரிக்கெட்டால் இரு நாடுகளுக்கு இடையிலான நல்லுறவு மேம்படும். நான் இதை முன்பே கூறியுள்ளேன். பாகிஸ்தானுக்கு வர இந்திய கிரிக்கெட் வீரர்கள் மிகவும் விரும்புவார்கள். இரு தரப்புக்கு இடையேயான நல்லுறவை மேம்படுத்த உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நிலைமை மாறாது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1886 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடு திரும்ப முடியாமல் வெளிநாடுகளில் சிக்கியிருந்த ஆயிரத்து 886 இலங்கையர்கள் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மீண்டும் நாடு திரும்பினர்.

கட்டாரிலிருந்து 146 பேரும், டுபாயிலிருந்து 169 பேரும் இவ்வாறு நாடு திரும் பினர். இவ்வாறு நாடு திரும்பிய இலங்கையர்கள் அனைவரும், தனிமைப்படுத்தல் நிலையங் களுக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அதேபோன்று இந்தக் காலப்பகுதியில் வெளிநாடுக ளுக்குப் புறப்பட்ட 11 விமா னங்களில் 691 பயணிகள் கட்டு நாயக்கா விமான நிலையத்தி லிருந்து சென்றனர். விமானத்தில் பயணித்தவர்க ளில் 116 பேர் கட்டாருக்கும், 100 பேர் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாய்க்கும் சென்றனர்.

இந்தக் காலகட்டத்தில், அமெரிக்கா, நோர்வே மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 27 வெளிநாட்டு சுற்றுலாப் பய ணிகள் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு வருகை தந்தனர். (எ)





# காடழிப்புக்கு எதிராக சவப்பெட்டியேந்தி ஐ.ம.ச.கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மார்ச் 26

**காடழிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுவாசிப்பதற்கு இடமளியுங்கள் என்ற தொனிப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி நேற்று முன்தினம் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தது.**

கொழும்பு 7 இல் உள்ள விஹாரமகாதேவி பூங்கா வளாகத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் இவ் ஆர்ப் பாட்டம் முன்னெடுக்கப் பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான துஷார இந்துனில், நளின் பண்டார மற்றும் ஹெக்டர் அப்புஹாமி சுற்றாடல் என்று சிங்கள மொழியில் எழுதப்பட்ட சவப்பெட்டியை சுமந்து சென்ற வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

அத்தோடு ஆதிக்குடிகளைப் போன்று வேடமிட்டிருந்த நபர்கள் சுற்றாடலைப் பாது காப்பதற்கு பூஜை வழி பாடுகளில் ஈடுபடுவதைப் போன்று நடனமாடினர்.

அத்தோடு விலங்குகளின் படங்கள் பதிக்கப்பட்டு எமது குடியிருப்புக்களை அழிக்காதீர் என்ற வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந் தோர் ஏந்தியிருந்தனர்.

எதிர்காலச் சந்ததியினருக் காக சுற்றாடலை பாதுகாப் போம், விலங்குகளின் இருப் பிடங்களைப் பாதுகாப்போம், சுற்றாடல் அழிவு தேசியத்துக்கு அச்சுறுத்தல், இன்று பாக்யா : நாளை உங்கள் மகள் என்ற வச னங்கள் எழுதப்பட்ட பதாகை களையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டோர் ஏந்தியிருந்தனர். (எ)

# விவசாய கூட்டுறவுச்சங்கங்களை மீளச்செயல்படுத்த நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

தற்போது செயல்பாட்டில் இல்லாத விவசாய கூட்டுறவுச் சங்கங்களை மீளச் செயல் படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப் பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத் தில் நேற்று இடம்பெற்ற விவ சாயக் குழுக் கூட்டத்தின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தின் போது மேற் படி தீர்மானம் எடுக்கப்பட்ட தாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள், பண் ணையாளர்கள் எதிர்நோக்கு கின்ற பல்வேறுபட்ட பிரச் னைகள் தொடர்பில் கலந்து ரையாடப்பட்டன.

அதேநேரத்தில் கமநல அபி விருத்தித் திணைக்களத்தின் ஊடாக மாகாண விவசாயத் திணைக்களம் ஊடாக, மற்றும் கால்நடை வைத்திய திணைக்க ளத்தின் மூலம் யாழ். மாவட்டத் தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள், சில மானி யத் திட்டங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் விவ சாயிகளுக்குத் தெளிவுபடுத்தப் பட்டது.

விவசாய அமைச்சு அதற் குரிய நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருகின்றது.

குறிப்பாக கிராமத்திலே 75 சதவீதமான மக்கள் வசித்து வரு கின்ற நிலையில் அவர்களுடைய மனை பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்குரிய அரசாங் கத்தினுடைய கொள்கையின் அடிப்படையில் பல்வேறுபட்ட மானியத்திட்டங்கள் விவசாயி கள் மற்றும் பண்ணையாளர்க ளுக்கு அறிமுகப்படுத்தப்பட் டுள்ளன. அதேபோன்று வங்கி களுக்கு ஊடாகவும் பல்வேறு பட்ட இலகு கடன்கள், வட்டி குறைந்த அடிப்படையில் அறி முகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் விவசாயிகளுக்கு விளக்கமளிக் கப்பட்டது. சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் விவசாயிக ளுக்கு அதனைத் தெளிவுபடுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விவசாயிகள் எதிர்நோக்கு கின்ற பிரச்னைகளாகிய கட்டாக் காலி மாடுகள், விவசாய நிலங் கள் நிரப்பப்படுதல், அதே போன்று விவசாய நிலங்களில் சட்டவிரோத மணல் அகழ்தல், கட்டிடங்கள் அமைத்தல் போன்ற விடயங்கள் தொடர் பில் இதன்போது ஆராயப்பட் டது. இதற்கு விவசாய கமநல சேவை திணைக்களமும் பிரதேச செயலாளர்களும் சம்பந்தப் பட்ட தரப்பினரோடு இணைந்து விவசாயிகளின் பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த பெரும் போகத்தின் போதும் விவசாயிகள் எதிர் கொண்ட நஷ்ட விவரங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதேநேரத்தில் அவர்களுக் குரிய தொழில்நுட்ப உதவிகள் மற்றும் கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் நடவடிக்கை கள் விவசாயிகளைச் சென்று சேர வேண்டும் என்ற விவசாயி களின் கோரிக்கை தொடர்பி லும் ஆராயப்பட்டது.

விவசாய அமைச்சால் அமுல் படுத்தப்படுகின்ற பல்வேறு பட்ட செயல்திட்டங்கள் மூலம் விவசாயிகள் பயன்பெற வேண்டும். அதே நேரத்தில் ஏற்கனவே இயங்கி தற்போது செயல்பாட்டில் இல்லாத சில விவசாயக் கூட்டுறவுச் சங்கங்க ளையும் செயல்படுத்தி அந்தச் சங்கங்கள் ஊடாக பயன்கள் யாவும் விவசாயிகளுக்கு கிடைக்கவேண்டும் எனவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது- என் றார். (எ)

# வேறு தேவைக்கு தோட்ட காணிகள் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்!

## வேலுகுமார் எம்.பி. வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 26

பெருந்தோட்ட காணிகளை வேறு தேவைக்காகப் பயன்படுத் துவதை அரசாங்கத்தில் உள்ள மலையகம் சார்ந்த பிரதிநிதிகள் தடுத்து நிறுத்துவார்களா? என ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப் பினர் வேலுகுமார் கேள்வியெ ழுப்பியுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற, பெருந்தோட்ட அலுவல்கள் அமைச்சு சார் ஆலோசனைக் குழுவின் இரண் டாம் கட்ட கூட்டத்தில் பங்கு பற்றிய பின் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோ சனைக் குழுவின் இரண்டாவது கூட்டம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதிலே அரசை பிரதிநிதித்துவப்படுத்தும், மாத் தளை தொடக்கம் மாத்தறை வரையான சகல எம்.பிக்களும் பல்வேறு தேவைகளுக்கு தோட்ட காணிகளை எடுப்பது தொடர்பிலேயே பேசினர்.

கிராம விரிவாக்கம், நகர விரி வாக்கம், பல்கலைக்கழக விரி வாக்கம் என ஒரு சாரார், இன்னு மொரு சாரார், பயிரிடப்படாத காணிகளை வெளியாருக்கு விவசாயத்துக்கு வழங்க வேண் டும் என்கின்றனர். மொத்தத்தில் பெருந்தோட்ட காணிகளை வேறு தேவைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

அரசை சார்ந்த பல எம். பிக்களும் பெருந்தோட்ட காணி சுவீகரிப்பு இழுத்தடிப்பாக உள்ளது எனக் குறைகூறினர்.

அமைச்சரை நேரடியாக தலை யிட்டு, விரைவாக தோட்ட காணி களை எடுக்கும் வழிமுறையை செய்து தருமாறு கேட்டனர்.

அதன் போது, தற்போதுள்ள சட்ட சிக்கலை நீக்கி, பெருந் தோட்ட காணிகளை விரை வாகவும், இலகுவாகவும் வேறு தேவைகளுக்கு எடுக்கக்கூடிய வகையில் அமைச்சரவை பத் திரமொன்று முன்வைக்கப்படு மென கூறப்பட்டது. மொத் தத்தில் எதிர்வரும் நாட்களில் பெருந்தோட்ட காணிகளை காப்பாற்றிக்கொள்வது பெரும் மொரு சவாலாக மாறப்போகிறது.

அரசாங்கத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் எமது பிரதிநிதி கள், இதனைத் தடுக்க நடவடிக் கைகள் எடுப்பார்களா? எனத் தெரியவில்லை. இந்த ஆலோ சனைக் குழுக் கூட்டத்தில், அரச பக்கமாக பெயரிடப்பட்டிருந்த மலையக பிரதிநிதி பிரசன்னமா கியும் இருக்கவில்லை.

இவ்வாறு மௌனமாக இருந்து விட்டு, இறுதியில் காணிகளை எடுப்பதற்கு நியாயம் கூற முற் படுவார்கள் என்ற நிலையே வெளிப்படுகின்றது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மக்களின் பிரச்னைகளுக்கு அபிவிருத்தியே ஒரே தீர்வு

## ஏமாற்ற இடமளிக்க முடியாது என்கிறார் ஜனாதிபதி கோட்டாபய



நுகேகொடை, மார்ச் 26

**நாட்டில் இன்று ஒரு தெளிவான கொள்கையும் திட்டமும் செயல்படுத்தப்படுகின்றது. கடந்த அரசாங்கம் ஏற்படுத்திய பிரச்னைகளைத் தீர்ப்பதிலேயே அரசாங்கத்தின் அதிக நேரம் செலவாகின்றது. நீண்ட காலமாக மக்களைப் பாதித்து வரும் பிரச்னைகளுக்கு முறையான அபிவிருத்தி மட்டுமே ஒரே தீர்வு என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

இதற்குத் தேவையான கொள்கைச் சட்டத்தையும் நிகழ்ச்சித் திட்டத்தையும் அரசாங்கம் முன்வைத்துள்ளது. ஜனாதிபதியாக கிராமம் கிராமமாக செல்வதும் உண்மையான மக்களின் பிரச்னைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்காகும். எத்தகைய கொள்கையோ திட்டமோ இல்லாத சிலர் இன்று அதையும் எதிர்க்கின்றனர் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

எவ்வாறான தடைகள் மற்றும் விமர்சனங்கள் வந்தாலும் மக்களுக்காக முன்னெடுக்கின்ற வேலைத் திட்டங்களை நிறுத்தப் போவதில்லை. பொய்ப் பிரசாரங்களால் மக்களை ஏமாற்றுவதற்கு இடமளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நுகேகொடை வெளிபார்க் பூங்காவில் இடம்பெற்ற சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் இணை அமைப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து 16 மாதங்களே ஆன குறுகிய காலத்தில் நாட்டில் தெளிவான கொள்கை ரீதியான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தம்மிடம் இம்மாற்றத்தையே எதிர்பார்த்ததாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பை உறுதி செய்து கலாசாரம், எமது பாரம்பரியம், தேசிய விழுமியங்கள் மற்றும் நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்ததாகவும் குறிப்பிட்டார்.

இக்காலத்துக்குள் உருவான பிரச்னைகளுக்கன்றி கடந்த அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட பிரச்னைகளுக்கே அரசாங்கம் அதிகளவில் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

19 ஆவது திருத்தத்தின் மூலம் உருவான தவறு அதில் ஒன்றாகும். 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றி அத்தவறை திருத்தினோம். தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்தியதால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்றது. அதைப்பற்றி விசாரணை செய்ய அவர்களே நியமித்த உயிர்த்த ஞாயிறு ஆணைக்குழுவுக்கு பொறுப்புக் கூற வேண்டிய நிலையும் எமது அரசாங்கத்துக்கே ஏற்பட்டுள்ளது.

எம்.சி.சி.ஒப்பந்தத்தைப்போல் கிழக்கு முனையத்தை குத்தகைக்கு வழங்க ஒப்பந்தம் செய்ததும் கடந்த அரசாங்கத்தின் காலத்திலாகும். அதுதொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைக்கும் அரசாங்கம் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

அவர்களே உருவாக்கிய பிரச்னைகளை சுட்டிக்காட்டி அன்றைய அரசாங்கத்தில் இருந்தவர்களே இன்று அரசுக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபடுவதாகவும் குறிப்பிட்ட ஜனாதிபதி, அரசாங்கத்தின் கொள்கை மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதுடன் அவர்கள் ஏற்படுத்திய பிரச்னைகளுக்குத் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் அதிக நேரத்தை செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (எ)

# இந்தியா நடுநிலை வகித்தாலும் ஒரு செய்தியை சொல்லியுள்ளது!

## பாராளுமன்றத்தில் சிறிதரன் உரை

கொழும்பு, மார்ச் 26

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் இந்தியா நாடு நிலைமை வகித்திருந்தாலும் இம்முறை கனதியான செய்தியை சொல்லியுள்ளது. இலங்கையில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது. இந்தப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இலங்கையினுடைய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தமிழ் மக்களுடைய சுயாதிபத்தியத்தையும் சுயாட்சியையும் வலியுறுத்தக்கூடிய வகையில் ஒரு தீர்வை முன்வையுங்கள் என இந்தியா வலியுறுத்தியுள்ளமையை காலத்தினுடைய கனதியான செய்தியாக நாம் பார்க்கின்றோம் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி.யான எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் தெிவித்தவை வருமாறு:

‘கடந்த 12 ஆண்டுகளாக ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன.

இந்த தீர்மானகள நிறைவேற்றப்படுவதற்கு இலங்கையில் கூட கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்சவுடைய காலத்தில் நல்லிணக்க ஆணைக்குழு ஊடாக சில தீர்வுகளைத் தருவதாக ஒரு குழு நியமிக்கப்பட்டது. பரணவிதான தலைமையில் ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. இந்த இரு ஆணைக்குழுக்களுமே அரசினால் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு செயலிழந்த நிலையில் கிடப்பில் போடப்பட்டன. நல்லிணக்க ஆணைக்குழுவில் சொல்லப்பட்ட எந்த விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நாங்கள் அதனை ஏற் றுக்கொள்ளவுமில்லை.

இந்திரா இந்தியப் பிரதமராக இருந்த காலப்பகுதியில் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைககளை மனிதக்குற்றங்களை வெளியுலகுக்கு கொண்டு வந்ததும் இலங்கையில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றது என்பதனை வெளியுலகுக்கு கொண்டு வந்ததும் அவருடைய காலம். இப்போது மீண்டும் இந்தியப்பிரதமர் மோடி தலைமையில் இந்திய அரசு இதனை மீண்டும் சர்வதேச தளத்தில் வெளியில் கொண்டு வந்துள்ளது மிக முக்கியமானது” எனத் தெரிவித்தார்.

# ஐ.நா. தீர்மானம் ஏமாற்றமே! ஆனால் எமக்கு பயனளிக்கும்!!

## தமிழ் அரசு தலைவர் மாவை கருத்து

யாழ்ப்பாணம், மார்ச் 26

“ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் ஏமாற்றத்தை தந்தாலும் சர்வதேசத்தின் பார்வையில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானங்கள் எமக்கு பயன்படக்கூடியவையாக இருக்கும். நிறைவேற்றிய நாடுகளும் நடுநிலைமை வகித்த நாடுகளும் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த தமது பங்களிப்பை வழங்குவார்கள் என்பதை நாம் நம்புகின்றோம்”, என்று இலங்கை தமிழ் அரசுக்கட்சித் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கூறியுள்ளார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் இலங்கை அரசாங்கம் தொடர்பான அறிக்கை மிகவும் காத்திரமாக இருந்தது. ஆனால், தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் எமக்கு ஏமாற்றம் தந்தாலும், அதனை நடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்புக்கள் மனித உரிமைகள் ஆணையாளருக்கே உண்டு.

அது மட்டுமன்றி சர்வதேசத்தின் பார்வையில் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானங்கள் எமக்கு பயன்படக்கூடியதாகவே இருக்கும். அது மட்டுமன்றி ஆதரவாக செயற்பட்ட நாடுகளும் நடுநிலைமை வகித்த நாடுகளும் குறிப்பாக இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள் பிரேரணையை நிறைவேற்றுவதற்கு கூடிய பங்களிப்பை செய்வார்கள் என்றே நாங்கள் நம்புகின்றோம் - என்றார். (ஐ)

D.C.M_N - யாழ். நகர்
(யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)
A/L 2023 கலை, வர்த்தக வகுப்புக்கள்
28.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி
வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
பொருளியல் S. ஜெயக்குமார்
கணக்கீடு S. தவா
வணிகக் கல்வி N.S. கபில்
கலைப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்
தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்
புவியியல் P.S.V. தினேஸ்
இந்துநாகரிகம் T. ஸ்ரீஸ்
அரசியல் பொன் சந்துரு
வரலாறு S.S.Y. பிரதீபன்
அளவையியல் T.T.நீதன்
ஊடகக் கல்வி N. தீபன்
ICT லவேந்திரன்
நாடகமும் அரங்கியலும் M. ஜங்கரன்
கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன்
விவசாய விஞ்ஞானம் B. பாலசுதன்
D.C.M_N - நிர்வாகி 077 011 9434

DHL உள்நாடு, வெளிநாடுகளுக்கான
விரைவு பொதிகள் சேவை
உள்நாடு யாழ். - கொழு. கொழு. - யாழ்.
12 மணித்தியாலங்களில் ஒப்படைக்கப்படும்
வெளிநாடு 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்
(நிபந்தனைக்குட்பட்டது)
Lanka Cargo Worldwide Express
315, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
076 283 2397 / 076 485 4092

விசேட விலையில் மடிக்கணனி
Laptop
4GB Ram
1 TB HDD
Windows 10
HP i3
Free Bag
கைமிருப்பு உள்ளவரை
St.Antonys Computer
189, K.K.S Road, Jaffna Town, Jaffna.
021 222 4865 / 075 069 8608

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. F.X. அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் வியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
12.30 மணி : துறைக்கு அப்பால்(மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10



**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-நெய்தல் நிலத்தின் வாழ்வியல்



10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஐ மீடியா (சக்தி/ரூபவாஹினி)

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org